# திசைகள்
THISAIGAL

PP19723/10/2022(035349)

வாய்மையின் வழிகாட்டி

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ ஆண்டு ஆடி மாதம் ஹிஜிரி 1447 முஹர்ரம்

Weekly Edition • July 2026 • Edition 3 *FREE COPY


## என்றும் வாழும் கடல்வழிப் பாரம்பரியம்; பஜாவ் இன மக்களின் அடையாளம்

உள்ளே...



# மெகா வளர்ச்சிக்கு RM6 பில்லியன்: நெகிரியை மாற்றியமைத்த பிரதமர் அன்வார்!



மடானி அரசாங்கம் பொறுப்பேற்றப் பின்னர் 2023 முதல், நெகிரி செம்பிலான் மாநில ஆண்டுச் செலவின நிதி ஒதுக்கீட்டை RM6 பில்லியனாக உயர்த்தப்பட்டுள்ளதாகப் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தெரிவித்தார். பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர் அறிமுக விழாவில் இதனைத் தெரிவித்த பிரதமர், மாநில வரலாற்றில் இல்லாத அளவாக RM19.2 பில்லியன் முதலீடு குவிந்ததையும் திரையில் பட்டியலிட்டார். கூட்டரசு மடானி அரசும், மாநில ஒற்றுமை அரசாங்கமும் இணைந்து நேர்மையுடன் செயல்பட்டதே இந்த அசுர வளர்ச்சிக்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(விரிவான செய்தி உள்ளே ...)



# நெகிரி செம்பிலானின் பொற்காலம்: டத்தோ ஸ்ரீ அமினுடின் ஹருனின் வரலாற்றுச் சாதனைகள்!

மாற்றமும் வளர்ச்சியும் வெறும் வார்த்தைகளல்ல, அவை முறையான ஆளுமையின் மூலம் நனவாக்கப்பட வேண்டிய இலக்குகள் என்பதை நெகிரி செம்பிலான் மாநிலம் கடந்த சில ஆண்டுகளாக நிரூபித்துக் காட்டி வருகிறது. பக்காத்தான் ஹரப்பான் (PH) மற்றும் ஒற்றுமை அரசாங்கத்தின் கீழ், நெகிரி செம்பிலான்....

விரிவான சிறப்புக் கட்டுரை உள்ளே...



# 9 மில்லியனில் புதிய பொலிவு: லாபு தமிழ்ப்பள்ளிக்கு மெகா விடியல்!

நெகிரி செம்பிலான் மாநிலத் தமிழ் நெஞ்சங்களின் 86 ஆண்டுகால அடையாளமான லாபு தோட்டம் பிரிவு 4 தமிழ்ப்பள்ளி, இனி அதிநவீனப் பொலிவுடன் மெகா நகரத்தில் மிளிரப் போகிறது! கல்வி அமைச்சின் அடிக்கல் நாட்டு விழா, 6 ஏக்கர் நில ஒதுக்கீடு, மற்றும் போக்குவரத்து அமைச்சர் அந்தோணி லோக், ஆட்சிக்குழு உறுப்பினர் ஜே. அருள்குமாரின் ஓயாத உழைப்பில் உருவான 9 மில்லியன் ரிங்கிட் மறுமலர்ச்சித் திட்டத்தின் முழுமையான சுவாரசியப் பின்னணிப் பார்வை!

விரிவான சிறப்புக் கட்டுரை உள்ளே...



# தம்பின் மக்களின் நீண்டகால கனவு நனவானது:

நெகிரி செம்பிலான் மாநிலத்தின் தம்பின் வட்டார இந்தியப் பெருமக்களின் பல தசாப்த கால பெரும் தேவையாகவும் எதிர்பார்ப்பாகவும் இருந்த நவீன மின் சுடலை அமைக்கும் திட்டம் தற்போது உறுதியான வடிவம் பெற்றுள்ளது.

## புக்கிட் ஜாலோர் மின் சுடலை கட்டுமானப் பணி துவக்கம்

உள்ளே...







# நெகிரி செம்பிலான் வளர்ச்சிக்கு ரி.ம. 6 பில்லியன் நிதி ஒதுக்கீடு:

# மடானி அரசாங்கத்தின் சாதனைப் பட்டியல்

நாட்டின் ஒற்றுமை அரசாங்கம் பொறுப்பேற்ற பின் 2023-ஆம் ஆண்டு முதல், நெகிரி செம்பிலான் மாநில மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மாநிலப் பொருளாதாரத்தை அசுர வேகத்தில் உயர்த்தவும் ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கீட்டைத் தொடர்ந்து அதிகரித்து வருவதாகப் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அறிவித்துள்ளார்.

நெகிரி செம்பிலான் மாநில வரலாற்றில் இல்லாத அளவிற்கு ரி.ம 19.2 பில்லியன் முதலீடு குவிந்தது என்றும் உள்கட்டமைப்பு மற்றும் புதிய மருத்துவமனைத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டதாக கடந்த ஜுலை 14 ஆம் தேதி மாநில சட்டமன்றத் தேர்தலில் 36 தொகுதிகளில் போட்டியிடும் பக்காத்தான் ஹராப்பான் கூட்டணியின் வேட்பாளர்கள் அறிமுக விழாவில் அந்தக் கூட்டணியின் தலைவருமான டத்தோ ஸ்ரீ அன்வார் பட்டியலிட்டார்.

வேட்பாளர்கள் அறிமுக விழாவில் உரையாற்றிய

## BANTUAN TUNAI RAKYAT TERTINGGI DALAM SEJARAH

| BANTUAN TUNAI | TAHUN | PERUNTUKAN (RM) | KADAR MAKSIMUM (RM) |
|---|---|---|---|
| BANTUAN RAKYAT 1MALAYSIA | 2018 | 6 BILION | 1,200 |
| BANTUAN KELUARGA MALAYSIA | 2022 | 8 BILION | 2,500 |
| SUMBANGAN ASAS RAHMAH / SUMBANGAN TUNAI RAHMAH | 2026 | 15 BILION | 4,600 |

KINI MEMANFAATKAN HAMPIR 9 JUTA PENERIMA




பிரதமர், கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தின் உள்கட்டமைப்பு மற்றும் சமூக நல்வாழ்விற்காகக் கொண்டு வரப்பட்ட பிரம்மாண்டத் திட்டங்களை அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்களுடன் அகன்ற திரையில் பொதுமக்களுக்கு விளக்கினார். கூட்டரசு அரசாங்கத்துடன் நெகிரி செம்பிலான் மாநில அரசு இணக்கமாகச் செயல்பட்டதால் மட்டுமே இத்தகைய அசுர வளர்ச்சியை எட்ட முடிந்தது என்று அவர் பெருமிதத்துடன் கூறினார். பிரதமர் வெளியிட்ட அந்த முக்கியத் தரவுகளின் விவரங்கள் வருமாறு:

ஆண்டு நிதி ஒதுக்கீடு மற்றும் முதலீட்டுச் சாதனை

- ஆண்டுச் செலவின உயர்வு: கடந்த 2022-ஆம் ஆண்டில் நெகிரி செம்பிலான் மாநிலத்திற்காக ரி.ம 4.4 பில்லியனாக இருந்த கூட்டரசு அரசின் ஆண்டுச் செலவின நிதி ஒதுக்கீடு, மடானி ஆட்சியில் தற்போது ரி.ம 6.0 பில்லியனாக உயர்த்தப்பட்டுள்ளது.
- வரலாற்று முதலீடு: மடானி அரசாங்கத்தின் சீரிய கொள்கைகளால் மாநில வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, கடந்த 2025-ஆம் ஆண்டில் முதலீட்டு அளவு ரி.ம 19.2 பில்லியனை எட்டி சாதனைப் படைத்துள்ளது. இது அதற்கு முந்தைய 2024-ஆம் ஆண்டின் (ரி.ம7.2 பில்லியன்) முதலீட்டுடன் ஒப்பிடும் போது 164% பிரம்மாண்ட உயர்வாகும்.

## தற்போது நிறைவடையும் முக்கியத் திட்டங்கள்

மடானி அரசாங்கத்தின் நேரடி நிதி ஒதுக்கீட்டில் மாநிலத்தில் தற்போது பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. அதில் கிராமப்புறச் சாலைகள் மேம்பாட்டிற்கு ரி.ம1.8 பில்லியனும், வெள்ள நிவாரணத் திட்டங்களுக்கு (Projek Tebatan Banjir) ரி.ம1.0 பில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், மலேசியா விஷன் வேலி (MVV) உள்கட்டமைப்பிற்கு ரி.ம1.2 பில்லியன், குடிநீர் விநியோகத் திட்டங்களுக்கு ரி.ம 740 மில்லியன், கெமாஸ் கெம் சையத் சிராஜுதீன் ஆர்.கே.ஏ.டி வகுப்பறைகளுக்கு ரி.ம 470 மில்லியன், பாரோய் - செனவாங் சாலைத் தரம் உயர்த்துதலுக்கு ரி.ம 100 மில்லியன் மற்றும் பழுதடைந்த பள்ளிகளைப் பராமரிக்க (Sekolah Daif) ரி.ம 94 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளது.

## மடானி அரசின் கீழ் வரும் புதிய திட்டங்கள்

மாநில மக்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு மடானி அரசாங்கம் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்துள்ளது. அதன்படி, ரி.ம 2 பில்லியன் மதிப்பில் 'சிரம்பான் சென்ட்ரல் டி.ஓ.டி' (TOD) நிலையமும், ரி.ம 600 மில்லியன் மதிப்பில் 'துவாங்கு ஜாஃபர் 2 மருத்துவமனையும்' (Hospital Tuanku Ja'afar 2) கட்டப்படவுள்ளன.

இவற்றுடன், டேசா காசுவரினாவில் புதிய பள்ளி (ரி.ம 223 மில்லியன்), நீலாயில் புதிய நீதிமன்ற வளாகம் (ரி.ம 81 மில்லியன்) மற்றும் தெலுக் கெமாங்கில் புதிய சுகாதார மருத்துவமனை (ரி.ம 55 மில்லியன்) ஆகிய புதிய திட்டங்களும் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படவுள்ளன.

மாநிலத்தின் இந்த அசுர வளர்ச்சிக்கும், முதலீட்டு உயர்வுக்கும் கூட்டரசு மடானி அரசாங்கமும் டத்தோ ஸ்ரீ அமினுடின் ஹரூண் தலைமையிலான மாநில ஒற்றுமை அரசாங்கமும் இணைந்து நேர்மையுடன் செயல்பட்டதே காரணம் என்று குறிப்பிட்ட பிரதமர், இந்த வளர்ச்சித் தொடர மக்கள் மீண்டும் பக்காத்தான் ஹராப்பான் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.








## தலையங்கம்

# இனவாதத்தைக் கடந்த தேர்தல்: வாக்குப் பெட்டியின் தீர்ப்பு

நெகிரி செம்பிலான் மாநிலத்தின் சட்டமன்றத் தேர்தல் களம் மிக விறுவிறுப்பான கட்டத்தை எட்டி இருக்கிறது. வரும் ஆகஸ்ட் முதல் தேதி நடைபெறவிருக்கும் இந்தத் தேர்தல், மலேசிய அரசியலில் ஒரு புதிய திருப்புமுனையை ஏற்படுத்தும் என ஒட்டுமொத்த நாடே ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றது.

அண்மையில் நடந்து முடிந்த ஜோகூர் மாநிலச் சட்டமன்றத் தேர்தலில், மொத்தமுள்ள 56 தொகுதிகளில் 48 இடங்களைக் கைப்பற்றி பாரிசான் நேஷனல் கூட்டணி தனது ஆட்சியைத் தற்காத்துக் கொண்டது. அந்தத் தேர்தல் தந்த அரசியல் படிப்பினைகளும் தாக்கங்களும் இந்தத் தேர்தலில் பெரிய அளவில் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நெகிரி செம்பிலானில் உள்ள 36 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது. இங்கு ஆளும் மாநில ஒற்றுமை அரசாங்கம் தனது தொகுதிகளைத் தற்காத்து, மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்வதற்கு மிகக் கடுமையான போட்டியைக் கொடுக்கும் என்று அரசியல் அரங்கில் நிலவுகிறது.

நாடு அடுத்த ஆகஸ்ட் மாதத்தில் தனது 79 ஆவது சுதந்திர தினத்தை மிக விமரிசையாகக் கொண்டாடவிருக்கிறது. பல்லின மக்களும் பல மதங்களைச் சார்ந்த சமூகத்தினரும் இணைந்து வாழும் மலேசியத் திருநாட்டில், இன்னும் சுயநல அரசியல் தலைவர்களால் இனவாத விவகாரம் தலைதூக்குவது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.



குறிப்பாக, கடந்த ஜோகூர் மாநிலத் தேர்தல் களத்தின் போது, மலாய்க்காரர்கள் தங்களின் அதிகாரத்தைத் தற்காத்துக் கொள்ள வேண்டுமானால் ஒரு மலாய்க்கார வாக்காளர், ஒரு

மலாய்க்கார வேட்பாளருக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என நாட்டை இருபத்திரண்டு ஆண்டுகள் வழி நடத்திய துன் மகாதீர் பேசினார்.
முன்னாள் பிரதமரான மூத்த அரசியல்வாதி துன் மகாதீர் முகமது வாக்காளர்களுக்கு இத்தகைய இனம்

சார்ந்த அறைகூவலை விடுத்தது, அரசியல் முதிர்ச்சியற்ற செயல் மட்டுமன்றி, பல்லின மக்கள்

மத்தியில் தேவையற்ற பிரிவினையையும் பெரிய மனக்கசப்பையும் உண்டாக்க வழிவகை செய்கிறது.
மறுபுறம், பாஸ் கட்சியின் தலைவர் அப்துல் ஹாடி அவாங், பெரிக்காத்தான் நேஷனல் கூட்டணி போட்டியிடாத தொகுதிகளில் பாரிசான் நேஷனல் வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்றும், அப்போதுதான் மலாய் ஆட்சியைத் தற்காக்க முடியும் என்றும் இனத்துவேஷத்தன்மையோடு பேசியுள்ளார்.

நாட்டின் ஆகச் சிறந்த தலைவர்கள் என்று கருதப்படுபவர்கள், தேர்தல் வெற்றிக்காக இத்தகைய குறுகிய வட்டத்திற்குள் சென்று பேசுவது மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்துகிறது. அரசியல்வாதிகள்

தங்களின் சேவை முதலீடு தீர்ந்த உடன் இனம் மற்றும் மதத்தை ஆயுதமாக்குவது வாடிக்கையாகிறது.

சுதந்திர மலேசியாவின் எழுபத்தொன்பதாவது நிறைவு விழாவை நெருங்கும் வேளையிலும், இத்தகைய பிற்போக்குத்தனமான கலாச்சாரம் தொடர்வது கவலைக்குரியது. நம் முன்னோர்கள் பாடுபட்டு வளர்த்த

ஒற்றுமையைச் சிதைக்கும் இத்தகையத் தலைவர்கள், இளைய தலைமுறையினருக்கு என்ன வழிகாட்டுவர்?

வருங்காலச் சந்ததியினரை இனம் மற்றும் மதம் என்ற குறுகிய நோக்கில் சிந்திக்கத் தூண்டுவது நாட்டை எவ்வாறு முன்னோக்கிச் செலுத்தப் போகிறது என்ற பெரிய சந்தேகத்தை எழுப்புகிறது. மக்கள் இனி மேலும் இத்தகைய போலியான அரசியல் முழக்கங்களை நம்பி ஏமாறக்கூடாது.

எனவே, இந்த நெகிரி செம்பிலான் சட்டமன்றத் தேர்தலிலாவது தலைவர்கள் இனம், மத விவகாரங்களைத் தங்களின் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தக்கூடாது. மாறாக, தங்களின் சமூகச் சேவை, மாநிலப் பொருளாதாரம், முதலீடு, இளையோருக்கான வேலை வாய்ப்புப் பற்றிப் பேசி வாக்குச் சேகரிக்க வேண்டும்.

இனவாதத்தைக் கடந்த தேர்தலாக நெகிரி செம்பிலான் தேர்தல் அமைய வேண்டும். மக்கள் தங்களின் வாக்குப் பெட்டிகள் மூலம் நாட்டின் நலனுக்கும், உண்மையான வளர்ச்சிக்கும் வாக்களித்துச் சிறந்த தீர்ப்பை வழங்க வேண்டும் என்பதே நமது தலையங்கத்தின் பிரதான நோக்கமும் பேராவலும் ஆகும்.

**இ.எம்.சாமி,**
**ஆசிரியர்,**
**திசைகள்.**



## நெகிரி செம்பிலானின் பொற்காலம்:

# டத்தோ ஸ்ரீ அமினுடின் ஹரூனின் தொலைநோக்கு ஆளுமையில் மலரும் வரலாற்றுச் சாதனைகள்!

**மாற்றமும் வளர்ச்சியும் வெறும் வார்த்தைகளல்ல, அவை முறையான ஆளுமையின் மூலம் நனவாக்கப்பட வேண்டிய இலக்குகள் என்பதை நெகிரி செம்பிலான் மாநிலம் கடந்த சில ஆண்டுகளாக நிரூபித்துக் காட்டி வருகிறது. பக்காத்தான் ஹரப்பான் (PH) மற்றும் ஒற்றுமை அரசாங்கத்தின் கீழ், நெகிரி செம்பிலான் மாநில மந்திரி பெசார் டத்தோ ஸ்ரீ அமினுடின் ஹரூன் அவர்களின் தலைமைத்துவம், மாநிலத்தை அனைத்துத் துறைகளிலும் ஒரு மாபெரும் பொருளாதார மற்றும் சமூக மறுமலர்ச்சியை நோக்கி வழிநடத்தியுள்ளது.**






2018-ஆம் ஆண்டில் அவர் மாநிலத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றது முதல், நிதி நிலைத்தன்மை, மக்கள் நலம், உள்கட்டமைப்பு என அனைத்துப் பிரிவுகளிலும் வரலாற்றுச் சாதனைகள் படைக்கப்பட்டு வருகின்றன. மலேசியாவின் முன்னணி பொருளாதார மாநிலங்களின் வரிசையில் நெகிரி செம்பிலானை ஆறாவது இடத்திற்கு உயர்த்தி, தன் நிர்வாகத் திறனை உலகிற்குப் பறைசாற்றியுள்ளார் டத்தோ ஸ்ரீ அமினுடின் ஹரூன்.

### வரலாற்றுச் சாதனை படைத்த முதலீட்டுப் புரட்சி (Investment Boom)

நெகிரி செம்பிலான் மாநிலத்தின் பொருளாதார வரலாற்றில் அமினுடின் ஹரூனின் ஆட்சிக்காலம் ஒரு 'முதலீட்டுப் புரட்சி' யுகமாகவே பார்க்கப்படுகிறது.




- பிரம்மாண்ட உயர்வு: கடந்த 2017-ஆம் ஆண்டில் வெறும் வெ.1.4 பில்லியனாக இருந்த மாநிலத்தின் மொத்த முதலீட்டு மதிப்பு, இவருடைய ஆட்சியில் பல மடங்கு உயர்ந்து அசுர வளர்ச்சி கண்டுள்ளது.

- 2025-இல் வரலாற்று உச்சம்: மாநில வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத சாதனையாக, கடந்த 2025-ஆம் ஆண்டில் மட்டும் நெகிரி செம்பிலான் அரசு வெ. 19.1 மில்லியன் முதலீட்டை ஈர்த்துப் புதிய சாதனைப் படைத்தது. இது முந்தைய 2024-ஆம் ஆண்டின் முதலீட்டுடன் ஒப்பிடுகையில் 164% மிக அதிகமாகும்.

- உயர் தொழில்நுட்ப வேலை வாய்ப்புகள்: இந்த பிரம்மாண்ட முதலீடுகள் வெறும் எண்களாக மட்டுமே நின்றுவிடாமல், மாநிலத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு அதிநவீன உயர் தொழில்நுட்பத் துறைகளில் (High-Tech Jobs) புதிய வேலை வாய்ப்புகளை வாரி வழங்கியுள்ளன.

### வலுவான நிதி மேலாண்மையும் உபரி வருவாய் சாதனையும் (Financial Revenue)

ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு அதன் நிதி நிர்வாகமே அஸ்திவாரம். அந்த வகையில், நெகிரி செம்பிலானின் நிதி நிலைத்தன்மையை டத்தோ ஸ்ரீ அமினுடின் மிகக் கவனமாகச் செதுக்கியுள்ளார்.






• தொடர் உபரி வருவாய் (Budget Surplus): முறையான, வெளிப்படையான நிதி நிர்வாகத்தின் காரணமாக, நெகிரி செம்பிலான் மாநில அரசு தொடர்ந்து மூன்று ஆண்டுகள் 'உபரி வருவாய்' ஈட்டி நிதிப் பற்றாக்குறையற்ற மாநிலமாகத் திகழ்கிறது.

• **வருவாய் இலக்கு தாண்டல்:** மாநிலத்தின் வருவாய் இலக்காக வெ. 520 மில்லியன் நிர்ணயிக்கப்பட்டிருந்த வேளையில், திறமையான வரி வசூலிப்பு மற்றும் புதிய வருவாய் வழித்தடங்கள் மூலம், இலக்கைத் தாண்டி வரலாற்று உச்சமாக வெ.636 மில்லியன் வருவாயைச் சேகரித்து மாநில அரசு சாதனைப் படைத்துள்ளது.

நவீன உள்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் எதிர்காலச் சவால்களுக்கு ஏதுவாக மாநிலத்தின் உள்கட்டமைப்பை நவீனப்படுத்துவதில் மந்திரி பெசார் தீவிரம் காட்டி வருகிறார்.

• டிஜிட்டலில் முதலிடம்: தேசிய டிஜிட்டல் திட்டங்களை முழுமையாகவும் மிக வேகமாகவும் செயல்படுத்திய மலேசியாவின் முதல் மாநிலமாக நெகிரி செம்பிலான் உருவெடுத்து, டிஜிட்டல் புரட்சியில் முன்னோடியாகத் திகழ்கிறது.

• ஸ்மார்ட் சிட்டி 2.0: தலைநகர் சிரம்பானை ஒரு நவீன 'ஸ்மார்ட் சிட்டி' (Smart City) ஆக மாற்றும் மாபெரும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் தற்போது மிகத் தீவிரமாக முடுக்கி விடப்பட்டுள்ளன.

• நெடுஞ்சாலை இணைப்புகள்: வெஸ்ட் கோஸ்ட் எக்ஸ்பிரஸ்வே (WCE) போர்ட் டிக்சன் வழித்தடம் மற்றும் செனவாங்– KLIA (SKLIA) இடையிலான புதிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் மூலம் மாநிலத்தின் போக்குவரத்து உள்கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டு வருகிறது. இது வணிகப் போக்குவரத்தை எளிதாக்குவதோடு, பயண நேரத்தையும் பெருமளவு குறைக்கும்.

மக்கள் நலத் திட்டங்களும் கல்வி மேம்பாடும் (Welfare & Education) "மக்களுக்காவே அரசாங்கம்" என்ற கொள்கைக்கு இலக்கணமாகத் திகழ்கிறது தற்போதைய நெகிரி செம்பிலான் நிர்வாகம்.

• 95 விழுக்காடு வாக்குறுதிகள் நிறைவேற்றம் கடந்த 2023 மாநிலத் தேர்தலின் போது மக்களுக்கு வழங்கப்பட்ட கூட்டு தேர்தல் அறிக்கையின் (Manifesto) 95 விழுக்காடு வாக்குறுதிகளை அமினுடின் அரசாங்கம் மிகக் குறுகிய காலத்திற்குள் வெற்றிகரமாக நிறைவேற்றி, மக்களின் நம்பிக்கைக்குரிய அரசாக மாறியுள்ளது.

• கல்விக்குக் கரம் கொடுக்கும் அரசு: கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், பல்கலைக்கழகங்களில் முதலாம் நிலையில் தேர்ச்சி பெறும் நெகிரி செம்பிலான் மாநில மாணவர்களுக்கு தலா வெ. 5,000 ரொக்கப் பரிசு மற்றும் உயர்கல்விக்கான பல்வேறு நிதியுதவிகளை மாநில அரசு தொடர்ந்து வாரி வழங்கி வருகிறது.

சமச்சீர் பிராந்திய பொருளாதார மேம்பாடு (Malaysia Vision Valley 2.0) மாநிலத்தின் வளர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் சார்ந்து இருக்கக்கூடாது என்பதில் மந்திரி பெசார் உறுதியாக உள்ளார்.

• மலேசியா விஷன் வேலி 2.0 (MVV 2.0): இந்த பிரம்மாண்ட திட்டத்தின் கீழ், சிரம்பான் மற்றும் போர்ட் டிக்சன் பகுதிகள் அதிநவீன தொழில்மயமாக்கல், பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் உலகத்தரம் வாய்ந்த சுற்றுலா மையங்களாக அதிவேக மேம்பாடு கண்டு வருகின்றன.

• அக்ரோபோலிஸ் மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா (Agropolis & Eco-Tourism): அதே வேளையில், ஜெம்போல், கோலா பிலா, தம்பின் மற்றும் ரெம்பாவ் ஆகிய உள்நாட்டுப் பகுதிகள் கைவிடப்படாமல், அவை விவசாயம், பல்லுயிர் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா மையங்களாக (Agropolis) மிக வலுவாக மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் கிராமப்புறப் பொருளாதாரமும் சமச்சீர் வளர்ச்சி கண்டுள்ளது.





## சகாப்தத்தை நோக்கி...

டத்தோஸ்ரீ அமினுடின் ஹரூனின் நிலையான, நேர்மையான மற்றும் வெளிப்படையான ஆளுமை, நெகிரி செம்பிலான் மாநிலத்தை மலேசியாவின் அசைக்க முடியாத பொருளாதார சக்தியாக நிலைநிறுத்தியுள்ளது.

வெற்று முழக்கங்கள் இன்றி, திட்டமிட்ட உழைப்பின் மூலமும், துல்லியமான புள்ளி விவரங்களின் மூலமும் மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் தடையின்றி வழிநடத்திச் செல்லும் மந்திரி பெசாரின் இந்தச் சாதனைகள், நெகிரி செம்பிலான் வரலாற்றில் என்றும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை என்பதில் ஐயமில்லை!





## தம்பின் மக்களின்

# நீண்டகால கனவு நனவானது:

## புக்கிட் ஜாலோர் மின் சுடலை கட்டுமானப் பணி துவக்கம்

நெகிரி செம்பிலான் மாநிலத்தின் தம்பின் வட்டார இந்தியப் பெருமக்களின் பல தசாப்த கால பெரும் தேவையாகவும் எதிர்பார்ப்பாகவும் இருந்த நவீன மின் சுடலை அமைக்கும் திட்டம் தற்போது உறுதியான வடிவம் பெற்றுள்ளது. தம்பின், புக்கிட் ஜாலோர் இந்து மயானப் பகுதியில் அமையவிருக்கும் இந்த புதிய மின் சுடலைக்கான கட்டுமானப் பணிகள், மாநில ஆட்சிக்குழு உறுப்பினரும், ரெப்பா முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். வீரப்பன் தலைமையில் அண்மையில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த தொடக்க விழாவில் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிமின் சிறப்பு அதிகாரி சண்முகம் மூக்கனும் சிறப்பு பிரமுகராக கலந்து சிறப்பித்தார்.

பல ஆண்டு காலமாகப் பல்வேறு நிர்வாகக் காரணங்களால் நிலுவையில் இருந்து வந்த இத்திட்டம், பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அவர்கள் நேரடியாக வழங்கிய பிரத்யேக மத்திய அரசு நிதியின் மூலமாகவே தற்போது சாத்தியமாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பிரதமரின் இந்த உடனடி நிதி ஒதுக்கீடு மற்றும் பக்காத்தான் ஹராப்பான் மாநில அரசின் தொடர் முயற்சிகளால் தம்பின் வட்டார மக்களின் நீண்டகாலத் துயரத்திற்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டுள்ளது.











இது குறித்து பூமி பூஜை மற்றும் கட்டுமானத் தொடக்க விழாவில் பேசிய மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் எஸ். வீரப்பன், இத்திட்டத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் ஆழமாக எடுத்துரைத்தார்.

தம்பின் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் இதுவரை மின் சுடலை வசதி இல்லாத காரணத்தால், இப்பகுதி மக்கள் தங்களது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் பிரேதங்களை மின் தகனம் செய்வதற்குப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்ததாக அவர் குறிப்பிட்டார். இனி வரும் காலங்களில், தம்பின் வட்டார மக்கள் இந்தியர்களின் பிரேதங்களை நவீன முறையில் தகனம் செய்வதற்கு ஒன்றரை மணி நேரம் நீண்ட தூரம் பயணம் மேற்கொண்டு மலாக்கா மாநிலத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும், அதே போல் மற்றொரு திசையில் ஒன்றரை மணி நேரம் பயணம் செய்து சிரம்பானுக்கு அலைய வேண்டியதில்லை என்றும் வீரப்பன் தெரிவித்தார். இந்த மின் சுடலை வளாகம் கட்டி முடிக்கப்படும் போது, தம்பின் மற்றும் அதன் அருகாமையில் உள்ள தோட்டப்புற மக்கள் தங்களின் இறுதிச் சடங்குகளைத் தங்களின் சொந்த வட்டாரத்திலேயே மிகக் குறைந்த செலவிலும், மன அமைதியுடனும் செய்து கொள்ள வழிவகை ஏற்படும்.

சமூக மேம்பாடுகளுக்கு இணையாக, இந்தியர்களின் நீண்டகால மயானப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் ஏற்கனவே ஒரு மாபெரும் தேசியத் திட்டத்தை அறிவித்திருந்தார். அதன்படி, நாட்டில் உள்ள 5 முதல் 6 மாநிலங்களில் (கெடா, ஜோகூர், சிலாங்கூர், நெகிரி செம்பிலான் மற்றும் பினாங்கு உள்ளிட்ட மாநிலங்கள்), மின் சுடலை வசதிகள் இல்லாத எட்டு முக்கிய இடங்களில் மொத்தம் 20 மில்லியன் ரிங்கிட் செலவில் புதிய நவீன மின் சுடலைகளை நிர்மாணிப்பதற்கான பிரத்யேக நிதி ஒதுக்கீட்டைப் பிரதமர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.





பிரதமர் அன்வார் அவர்களின் இந்த 20 மில்லியன் ரிங்கிட் தேசியத் திட்டத்தின் ஓர் அங்கமாகவே, தற்போது தம்பின் புக்கிட் ஜாலோர் மின் சுடலைத் திட்டமும் மிக வேகமாக நனவாகி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய சமூகத்தின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவர்களின் வாழ்வாதாரம் மட்டுமின்றி இறுதிச் சடங்குகளுக்கான மரியாதையையும் உறுதிச் செய்யும் வகையில் பக்காத்தான் ஹராப்பான் தலைமையிலான மத்திய-மாநில அரசுகள் எடுத்து வரும் இத்தகைய முற்போக்கான நடவடிக்கைகள், நெகிரி செம்பிலான் இந்தியர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.





## மலேசியாவின் அடுத்த சிலிக்கான் வேலி:

# நெகிரி செம்பிலானின் 'எம்விவி 2.0' நவீன நகரப் புரட்சி

மலேசியாவின் பொருளாதார வரைபடத்தில் நெகிரி செம்பிலான் மாநிலத்தை உலகத் தரத்திற்கு உயர்த்தும் ஒரு பிரம்மாண்டமான கனவுத் திட்டம்தான் மலேசியா விஷன் வேலி 2.0 (MVV 2.0). கிள்ளான் பள்ளத்தாக்கின் நெரிசலைக் குறைத்து, அதன் பொருளாதார வளர்ச்சியைத் தெற்கு நோக்கி விரிவாக்கம் செய்யும் நோக்கில், நெகிரி செம்பிலான் மாநில அரசால் இத்திட்டம் மிகத் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுமார் 153,411 ஹெக்டர் பரப்பளவைக் கொண்ட இந்த அதிநவீனப் பெருநகரம், மலேசியாவின் எதிர்காலப் பொருளாதார என்ஜினாக மாறவிருக்கிறது.

இந்த புதிய நகரம் ஒட்டுமொத்த நெகிரி செம்பிலானின் மேற்குப் பகுதியை உள்ளடக்கிய ஒரு பிரம்மாண்ட பொருளாதார வளையமாகும். இத்திட்டம் முக்கியமாக சிரம்பான் மற்றும் போர்ட் டிக்சன் ஆகிய இரண்டு மாவட்டங்களை முழுமையாக உள்ளடக்கியது. இது நீலாய், சிரம்பான் மற்றும் போர்ட் டிக்சன் ஆகிய பகுதிகளை இணைத்து ஒரு மாபெரும் வளர்ச்சி முக்கோணத்தை உருவாக்குகிறது. கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்திற்கு மிக அருகில் இருப்பதும், புத்ராஜெயா மற்றும் சைபர்ஜெயா போன்ற முக்கிய நிர்வாக மையங்களுக்குப் பக்கத்து வாசலாக இருப்பதும் இந்த புதிய நகரத்தின் மிகப் பெரிய பலமாகும்.

இந்த நவீன நகரம் வெறும் குடியிருப்புப் பகுதியாக மட்டும் இல்லாமல், ஆறு பெரும் பொருளாதார மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு மிகத் துல்லியமாகத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் அதிநவீன மைக்ரோசிப் மற்றும் செமிகண்டக்டர் தயாரிப்புக்கான பிரத்யேக மண்டலம், விண்வெளித் தொழில்நுட்பப் பூங்கா, கடல்சார் வணிகம் மற்றும் கப்பல் போக்குவரத்து உள்கட்டமைப்பு, மற்றும் ட்ரோன்கள் போன்ற தன்னாட்சி வாகனங்களை உருவாக்கும் தளம் ஆகியவை அமையவுள்ளன.

எம்விவி 2.0 பகுதியானது எதிர்காலத்தில் லட்சக்கணக்கான மக்கள் குடியேறும் ஒரு கனவு இல்லப் பிரதேசமாக மாறவுள்ளது. மலேசியாவின் முன்னணி நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக மட்டும் 15,000 நவீன வீடுகளை உள்ளடக்கிய அதிநவீன நகரியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. இதில் ஆடம்பர பங்களாக்கள், நடுத்தர அடுக்குமாடி



குடியிருப்புகள் மற்றும் சாதாரண உழைக்கும் மக்களுக்கான மலிவு விலை வீடுகள் என அனைத்தும் சுற்றுச்சூழல் நட்பு முறையில் கட்டப்படுகின்றன. இங்கு அமையவிருக்கும் வீடுகள் அனைத்தும் அதிவேக 5G இணைய இணைப்பு, தானியங்கி கழிவு மேலாண்மை மற்றும் சூரிய ஆற்றல் வசதிகளுடன் கூடிய 'ஸ்மார்ட் ஹோம்' தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கும்.

இத்திட்டத்தின் மிக முக்கிய நோக்கமே உள்ளூர் இளைஞர்களுக்கான உலகத்தரம் வாய்ந்த வேலை வாய்ப்புகளை உருவாக்குவதுதான். இந்த மெகா திட்டத்தின் மூலம், வரும் 2045-ஆம் ஆண்டிற்குள் சுமார் 600,000-க்கும் மேற்பட்ட உயர்



வருவாய் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சாம்சங், ஆன் செமிகண்டக்டர் மற்றும் நெக்ஸ்பீரியா போன்ற உலகப் புகழ்பெற்ற நிறுவனங்கள் இங்கு தங்களின் பில்லியன் கணக்கான முதலீடுகளைத் தொடங்கியுள்ளன. செயற்கை நுண்ணறிவு தரவு மையங்கள், மின்சார வாகனத் தயாரிப்பு, பயோடெக்னாலஜி மற்றும் விண்வெளிப் பொறியியல் ஆகிய துறைகளில் இளைஞர்களுக்குப் புதிய வேலைகள் கொட்டிக் கிடக்கும்.

அதிவேகமாக வளர்ந்து வரும் இந்தத் திட்டத்தில், முதலீட்டாளர்களைக் கவரும் வகையில் நெகிழ்வான வணிகக் கொள்கைகளும், எளிமையான அரசு அனுமதி நடைமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உலகளாவிய வர்த்தக மையமாக இந்நகரத்தை மாற்றுவதற்காக, இங்கு அமையவிருக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் (ஞயீநஉயைட நுஉடிடேஅஉை ஷ்டிநேள) வணிகம் தொடங்கும். வெளிநாட்டு மற்றும் உள்ளூர் நிறுவனங்களுக்குப் பல்வேறு வரிச் சலுகைகளும், நீண்ட கால முதலீட்டுப் பாதுகாப்பும் மாநில அரசால் உத்தரவாதம் செய்யப்படுகின்றன.

மேலும், சுற்றுச்சூழல் மற்றும் நீடித்த நிலைத்தன்மைக்கு (ஞரளவயயேயெடைவைல) இத்திட்டத்தில் மிக உயர்ந்த முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. கார்பன் உமிழ்வைக் குறைக்கும் நோக்கில், இந்த நவீன நகரின் பொதுப் போக்குவரத்து அமைப்பு முழுவதும் மின்சாரப் பேருந்துகள் மற்றும் மின்சார வாகனங்கள் சார்ந்ததாகவே வடிவமைக்கப்பட்டு வருகிறது; அதோடு கழிவுப் பொருட்களிலிருந்து மறுசுழற்சி முறையில் மின்சாரம் தயாரிக்கும் அதிநவீன ஆலைகளும், இயற்கை நீர்நிலைகளைப் பாதுகாக்கும் பிரத்யேகத் திட்டங்களும் இங்கு முழு வீச்சில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

எதிர்காலத் தலைமுறை எப்படி வாழ வேண்டும் என்பதை இப்போதே திட்டமிட்டு இந்த நகரத்தின் தொலைநோக்கு வசதிகள் வடிவமைக்கப்படுகின்றன. கோலாலம்பூர் - சிங்கப்பூர் அதிவேக ரயில் திட்டத்தில், இந்த எம்விவி 2.0 நகரத்திற்குள் ஒரு பிரத்யேக ரயில் நிலையம் அமையவுள்ளது. இது சிங்கப்பூர் மற்றும் கேஎல் நகரங்களுடனான பயண நேரத்தை வெறும் நிமிடங்களாகக் குறைக்கும். இந்த நகரத்தின் 15% பகுதி பூங்காக்கள், ஏரிகள் மற்றும் பசுமை வழித்தடங்களுக்காக மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. மிதிவண்டி ஓட்டுவதற்கும், பாதசாரிகள் நடப்பதற்கும் பிரத்யேகப் பாதைகள் அமைக்கப்படுகின்றன. அதிநவீன கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்பப் பயிற்சி மையங்கள் மற்றும் உலகத்தரம் வாய்ந்த மல்டி-ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகள் ஒரே இடத்தில் அமையவுள்ளன.

மலேசியா விஷன் வேலி 2.0 என்பது வெறும் ஒரு கட்டுமானத் திட்டம் அல்ல; அது நெகிரி செம்பிலான் மாநிலத்தை அடுத்தக் கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் ஒரு பொருளாதாரப் புரட்சி. மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அமினுடின் ஹரூனின் தொலைநோக்கு ஆளுமையின் கீழ், விறுவிறுப்பாக வளர்ந்து வரும் இந்த நவீன நகரம், மலேசியாவின் மிகச் சிறந்த வாழக்கூடிய மற்றும் தொழில் செய்யக்கூடிய 'ஸ்மார்ட் பெருநகரமாக' மாறும் நாள் வெகுதொலைவில் இல்லை.



## ஒற்றுமை அரசாங்கத்தின் கீழ்

# நெகிரி செம்பிலான் மக்களின் நல்வாழ்வும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களும்;

## ஒரு விரிவான பார்வை



**நெகிரி செம்பிலான் மாநில சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் வேளையில், நடப்பு பக்காத்தான் ஹராப்பான் தலைமைத்துவத்தின் கீழ் மாநில மக்களின் சமூக, பொருளாதார நல்வாழ்வுக்கு ஆற்றியுள்ள பங்களிப்புகள் அளப்பரியவை.**

குறிப்பாக, அடித்தட்டு மக்கள், நடுத்தரக் குடும்பங்கள் மற்றும் மூத்த குடிமக்களின் பாதுகாப்பை உறுதிச் செய்யும் வகையில் பல முற்போக்கானத் திட்டங்கள் இங்கு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் (Bantuan Ihsan) திட்டத்தின் கீழ், ஏழை எளிய குடும்பங்கள், முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவடைந்த பிரிவினருக்குத் தேவையான மாதாந்திர மற்றும் அவசரகால நிதியுதவிகள் தொடர்ந்து தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றுடன், உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டில் பக்காத்தான் ஹராப்பான் கூட்டணி அரசு பெரும் கவனம் செலுத்தி வருகிறது. சிலாங்கூர் மற்றும் கோலாலம்பூர் போன்ற அண்டை மாநிலங்களை எளிதில் இணைக்கும் வகையிலான நவீனப் போக்குவரத்து



வசதிகள், கிராமப்புறச் சாலைகளின் விரிவாக்கம் மற்றும் பொது உள்கட்டமைப்புகள் பெருமளவில் நவீனப்படுத்தப்பட்டு, பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை முறை எளிதாக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, மாநிலத்தின் மூத்த குடிமக்களைக் கௌரவிக்கும் வகையிலும், அவர்களின் விழாக் கால மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும் வகையிலும், நெகிரி செம்பிலான் மாநில அரசு 'ஸ்கிம் செஜத்ரா ராக்யாட்' (Skim Sejahtera Rakyat) கொள்கையின் கீழ் ஒரு சிறப்புத் திட்டத்தை அமல்படுத்தி வருகிறது. இதன்படி, மாநிலத்தில் உள்ள 36 சட்டமன்றத் தொகுதிகளிலும் (DUN) வசிக்கும் 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு ஒரு முறை வழங்கப்படக்கூடிய (One-off) 200 ரிங்கிட் ரொக்க உதவி (Sumbangan Keceriaan Warga Emas) நேரடியாக வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி சேவை மையங்கள் (Pusat Khidmat DUN) மற்றும் N9 டிஜிட்டல் செயலி (N9 Digital) வாயிலாக ஒருங்கிணைக்கப்படும் இந்த 200 ரிங்கிட் நிதியுதவி, குறிப்பாக ஹரிராயா, சீனப் புத்தாண்டு, தீபாவளி போன்ற அந்தந்த இனத்தவர்களின் முக்கிய விழாக் காலங்களுக்குச் சற்று முன்பாகவே அவர்களின் கைகளில் நேரடியாகச் சென்றடைவதை மந்திரி பெசார் டத்தோ ஸ்ரீ அமினுடின் ஹாரூன் தலைமையிலான அரசு உறுதிச் செய்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 37,537 மூத்த குடிமக்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ள வேளையில், நடப்பு 2026-ஆம் ஆண்டிலும் இந்த விழாக் கால நிதியுதவி எவ்விதத் தடையுமின்றித் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.







இது போன்ற அடிமட்ட மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள், தமிழ்ப்பள்ளிகளுக்கான கல்வி மேம்பாட்டு பேராதரவு மற்றும் மூத்த குடிமக்களுக்கான பிரத்யேக விழாக் கால ஊக்கத்தொகை ஆகிய அனைத்தும் நெகிரி செம்பிலான் மாநில பக்காத்தான் ஹராப்பான் அரசாங்கம் மக்களின் நல்வாழ்விற்கு வழங்கியுள்ள உச்சக்கட்ட ஏற்றத்திற்கான மிகச் சிறந்த சான்றுகளாகும்.








## 86 ஆண்டுகால வரலாற்றுப் பெருமையுடன்

## லாபு தோட்டம் பிரிவு 4

# தமிழ்ப்பள்ளியின் புதிய கட்டுமானப் பணிகள்

**நெகிரி செம்பிலான் மாநிலத்தின் 86 ஆண்டுகால வரலாற்றுப் பெருமைமிக்க அடையாளங்களுள் ஒன்றான லாபு தோட்டம் பிரிவு 4 தமிழ்ப்பள்ளிக்கு ஒரு புதிய விடியலாக, அதன் அதிநவீனப் புதிய வளாகத்திற்கான கட்டுமானப் பணிகள் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கின.**

**கல்வி அமைச்சர் ஃபட்லீனா சிடெக் மற்றும் துணைக் கல்வி அமைச்சர் வோங் கா வோ ஆகியோர் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை அடிக்கல் நாட்டி அதிகாரப்பூர்வமாகத் தொடக்கி வைத்தனர்.**



இந்த விழாவில், நெகிரி செம்பிலான் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் ஜே. அருள்குமார் சிறப்புப் பிரமுகராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். எம்.வி.வி சிட்டி (MVV City) மற்றும் அதன் சுற்று வட்டார இந்தியச் சமூகத்தின் கல்வித் தரத்தை உயர்த்துவதில் மாநில அரசு கொண்டுள்ள தீவிர அக்கறையையும் ஆதரவையும் அவர் தனது வருகையின் மூலம் முன்னிலைப்படுத்தினார்.

இந்த மாபெரும் மறுமலர்ச்சித் திட்டத்தின் விஷன் வேலி திட்டத்தின் கீழ், பள்ளிக்காக 6 ஏக்கர் பரப்பளவிலான புதிய நிலத்தை ஒதுக்கீடு செய்து தந்ததில் தொடங்கி, கட்டுமானத்திற்கான நிதித் தேவைகளைத் திட்டமிட்டது வரை அருள்குமாரின் பங்களிப்பு அளப்பரியது. இப்புதிய பள்ளி வளாகத்தின் ஒட்டுமொத்த கட்டுமானச் செலவு 9 மில்லியன் ரிங்கிட் என மதிப்பிடப்பட்டது. இதில் மேம்பாட்டாளர் நிறுவனமான மேட்ரிக்ஸ் கான்செப்ட்ஸ் (Matrix Concepts Holdings Berhad), தனது சமூகப் பொறுப்புணர்வின் கீழ் சரிபாதித் தொகையான 4.5 மில்லியன் ரிங்கிட்டை (50 விழுக்காடு) முழுமையாக





ஏற்றுக்கொண்டது.

எஞ்சிய 4.5 மில்லியன் ரிங்கிட் தொகையைத் திரட்டுவது ஒரு பெரும் சவாலாக இருந்த போது, ஆட்சிக்குழு உறுப்பினர் அருள்குமார் அவர்கள் பள்ளி நிர்வாகம் மற்றும் பள்ளி மேலாளர் வாரியத்துடன் கைகோர்த்து களமிறங்கினார். சிரம்பான் நாடாளுமன்ற

பின்னணியில், நெகிரி செம்பிலான் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் ஜே. அருள்குமார் அவர்களின் அர்ப்பணிப்பும், ஓயாத உழைப்பும் மிக முக்கியமான உந்துசக்தியாகத் திகழ்ந்துள்ளன. வெறும் மக்கள் பிரதிநிதியாக மட்டும் நின்று விடாமல், இப்பள்ளியின் அவல நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்பதில் அவர் காட்டிய தீவிர அக்கறை பாராட்டுக்குரியது. மாநில அரசாங்கத்தின் மூலம் மலேசியா

உறுப்பினரும், கூட்டரசு போக்குவரத்து அமைச்சருமான மாண்புமிகு அந்தோணி லோக் தலைமையில், அண்மையில் சிரம்பானில் ஒரு பிரம்மாண்ட நிதி திரட்டும் இரவு உணவு நிகழ்வு மிக வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்விற்காகத் தாராள மனப்பான்மை கொண்ட பெருநிறுவன நன்கொடையாளர்களையும், சமூக ஆர்வலர்களையும் நேரில் ஒருங்கிணைத்த பெருமை ஆட்சிக்குழு உறுப்பினர் அருள்குமாரையே சாரும். அவரது சீரிய முயற்சியால், பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அவர்களின் சார்பில் மத்திய அரசாங்கத்தின் 2 மில்லியன் ரிங்கிட் சிறப்பு நிதியும், தனியார்துறை நிறுவனங்களின் தலா 1 மில்லியன் ரிங்கிட் நன்கொடைகளும் திரட்டப்பட்டு, இலக்கு வைக்கப்பட்ட எஞ்சிய 4.5 மில்லியன் ரிங்கிட் தொகை மிகக் குறுகிய காலத்தில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது.






கல்வி, பொருளாதார வளர்ச்சி மற்றும் தரமான வாழ்க்கை முறை ஆகியவை ஒன்றோடொன்று இணைந்து பயணிக்கும் ஒரு நிலையான சமூ கத்தை உருவாக்குவதே இந்த ஒருங்கிணைந்த நகரத்தின் நீண்டகால தொலைநோக்குத் திட்டமாகும் என்று கல்வி அமைச்சர் ஃபட்லீனா சிடெக் தனது உரையில் விவரித்தார். அடுத்த 12 மாதங்களில் கட்டி முடிக்கப்படவுள்ள இந்த புதிய அதிநவீன வளாகத்தில் 12 வகுப்பறைகள், அறிவியல்-கணினி அறைகள், மழலையர் பள்ளி மற்றும் பிரம்மாண்ட விளையாட்டு மைதானம் ஆகியவை அமையவுள்ளன.

ஒரு காலத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்வி பயின்று, தற்போது சுமார் 20 மாணவர்களுடன் இயங்கும் இப்பள்ளி, எம்.வி.வி சிட்டி (MVV City) நகரம் அதிவேக மேம்பாடு கண்டு வரும் வேளையில் மீண்டும் நூற்றுக்கணக்கான இந்திய மாணவர்கள் தங்குதடையின்றித் தங்களின் தரமான ஆரம்பக் கல்வியைப் பெறும் ஓர் உன்னத மையமாக உருவெடுக்கும் என்று பள்ளி வாரியத் தலைவர் நவஜீவன் இராமசாமி நெகிழ்ச்சியோடு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.







கல்வி உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதும், வளர்ந்து வரும் சமூகங்களுக்கு ஏற்ப கற்றல் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதும் தற்போதைய காலக்கட்டத்தின் முக்கியத் தேவையாகும். வருங்காலத் தலைமுறையினருக்கு மிகவும் சாதகமான, உள்ளடக்கிய மற்றும் எதிர்காலத்திற்கு ஏற்ற ஒரு சிறந்த கற்றல் சூழலை உருவாக்குவதில் அரசாங்கம், கல்வித் துறை சார்ந்தவர்கள் மற்றும் தனியார் துறையினரின் கூட்டு முயற்சிகள் எவ்வளவு முக்கியம் என்பதை இந்தப் புதிய பள்ளித் திட்டம் பிரதிபலிக்கிறது.



# நெகிரி செம்பிலான் தேர்தல்: சீனர்களின் ஆதரவு எந்தப் பக்கம் பாயும்?

## – ஓர் அரசியல் பார்வை

**நெகிரி செம்பிலான் மாநிலச் சட்டமன்றத் தேர்தல் வரும் ஆகஸ்ட் 1-ஆம் தேதி நடைபெறவுள்ள சூழலில், அம்மாநில அரசியல் களம் மிகவும் சூடு பிடித்துள்ளது. இத்தேர்தலில் மாநிலத்தின் ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் சீன சமூக வாக்காளர்களின் ஆதரவு எந்தப் பக்கம் பாயும் என்ற எதிர்பார்ப்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாக எழுந்துள்ளது. தற்போதைய அரசியல் நிலவரங்கள் மற்றும் கடந்த கால சாதனைகளின் அடிப்படையில் பார்க்கும் போது, சீனர்களின் பெரும்பான்மையான ஆதரவு ஜனநாயகச் செயல் கட்சியான ஜசெக. வாயிலாகப் பக்காத்தான் ஹறாப்பான் (PH) கூட்டணிக்கே மீண்டும் முழுமையாகக் குவியும் என்பது துல்லியமாகப் புலனாகிறது.**





நெகிரி செம்பிலான் மாநில பக்காத்தான் ஹறாப்பான் கூட்டணியின் இந்த அசைக்க முடியாத பலத்திற்கு மிக முக்கியக் காரணம், ஜசெக தேசியப் பொதுச் செயலாளரும், நெகிரி செம்பிலான் மாநில ஜசெக தலைவரும், நாட்டின் போக்குவரத்து அமைச்சருமான அந்தோணி லோக் அவர்களின் ஆளுமையே ஆகும். அவர் மாநிலத் தலைவராகப் பொறுப்பேற்றது முதல் இன்று வரை, சீன மற்றும் இந்திய சமூக மக்களுடன் மிகவும் அணுக்கமான மற்றும் எளிமையான உறவைத் தொடர்ந்து பேணி வருகிறார். அவருடன் இணைந்து செயல்படும் ஜசெக-வின் இதர சட்டமன்ற உறுப்பினர்களும், தங்களின் தொகுதிகளில் உள்ள அடிமட்ட மக்கள், வணிகர்கள் மற்றும் சமூக அமைப்புகளுடன் அன்றாடம் தொடர்பில் இருந்து அவர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்த்து வருகின்றனர். இத்தகைய மக்கள் நலம் சார்ந்த மற்றும் நேர்மையான அணுகுமுறையே, சிறுபான்மை



சமூகங்களின் ஒட்டுமொத்த ஆதரவும் பக்காத்தான் ஹறாப்பான் பக்கம் உறுதியாக நிற்பதற்கு அடிப்படையான காரணமாகும்.

சீன சமூகத்தின் இந்த ஆதரவுக்குப் பின்னால் பல முக்கியக் காரணங்கள் உள்ளன. குறிப்பாக, பக்காத்தான் ஹறாப்பான் மாநில அரசு, நெகிரி செம்பிலானில் உள்ள சீனத் தேசிய வகை பள்ளிகள் மற்றும் சீனத் தனியார் பள்ளிகளின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு ஆண்டுதோறும் தங்கு தடையின்றி இலட்சக்கணக்கான ரிங்கிட் நிதியுதவிகளை வழங்கி, கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து வருகிறது. மேலும், மந்திரி பெசார் டத்தோ ஸ்ரீ அமினுடின் ஹாரூன் மற்றும் அந்தோணி லோக்கின் கூட்டுத் தலைமையிலான ஆட்சியில், மாநிலத்தில் எவ்விதப் பெரிய ஊழல் புகார்களும் இன்றி வெளிப்படையான நிர்வாகம் சாத்தியமானது, சீன வணிக சமூகத்தினரிடையே பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், மலேசியாவின் பல்லினக் கலாச்சாரத்தையும், மத நல்லிணக்கத்தையும் பாதுகாப்பதில் பக்காத்தான் ஹறாப்பான் கூட்டணி காட்டி வரும் தீவிர அர்ப்பணிப்பு, தீவிரவாத அரசியல் போக்குகளை முற்றிலும் வெறுக்கும் சீன வாக்காளர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது.







கடந்த தேர்தல்களில் நெகிரி செம்பிலானில் ஜசெக போட்டியிட்ட அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும் நூறு விழுக்காடு வெற்றி பெற்று சாதனை படைத்தது. அதே போன்றதொரு இமாலய ஆதரவை, வரும் ஆகஸ்ட் 1 தேர்தலிலும் சீன மற்றும் இந்திய வாக்காளர்கள் பக்காத்தான் ஹறாப்பானுக்கு வழங்குவார்கள் என அரசியல் ஆய்வாளர்கள் கணிக்கின்றனர். சுருக்கமாகக் கூறின், அந்தோணி லோக்கின் வழிகாட்டுதலில், நெகிரி செம்பிலான் சீனர்களின் வாக்குகள் பக்காத்தான் ஹறாப்பானின் வெற்றிக் கோட்டையை மேலும் பலப்படுத்தும் வினையூக்கியாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

# என்றும் வாழும் கடல்வழிப் பாரம்பரியம்:
## பஜாவ் இன மக்களின் அடையாளம்



**சபா** மாநிலத்தில் உள்ள செம்பூர்ணா கடற்பகுதி, ஆண்டுதோறும் ஒரு வண்ணமயமான கலாச்சாரத் திருவிழாவால் உயிர் பெறுகிறது. அதுதான் 'ரீகாத்தா லெபா' திருவிழா. நடப்பாண்டில் 31-ஆவது ஆண்டாக வெற்றிகரமாகக் கொண்டாடப்பட்ட இந்த விழா, வெறும் கொண்டாட்டம் மட்டுமல்ல; அது சபா கடலோரப் பகுதியில் வாழும் 'பஜாவ்' பழங்குடி மக்களின் ஆழமான கடல்வழிப் பாரம்பரியத்தையும், கடலோடு பின்னிப் பிணைந்த அவர்களின் வாழ்வியலையும் உலகிற்குப் பறைசாற்றும் ஒரு வரலாற்றுப் பதிவாகும். பஜாவ் மக்களின் கலாச்சாரத்தில் 'லெபா' எனப்படும் பாரம்பரிய மரப் படகுகள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. செம்பூர்ணா மற்றும் அதனைச் சுற்றியுள்ள தீவுகளில் வாழும் இந்த மக்களின் முதன்மைப் போக்குவரத்து வாகனமாக விளங்கியவை இத்தகைய பாரம்பரியப் படகுகள்தான்.



உள்ளூர் ஆசிரியரும் வரலாற்று ஆய்வாளருமான சுபீர் ஒஸ்மான் என்பவரின் கூற்றுப்படி, இது ஒரு திருவிழாவாக மாறுவதற்கு முன்பே, பஜாவ் மக்களின் அன்றாட வாழ்க்கையோடு கலந்த ஒன்றாக இருந்தது. முற்காலத்தில், பாதுகாப்பு மற்றும் சமூக உறவுகளைப் பேணும் பொருட்டு, இந்த மக்கள் ஐந்து அல்லது ஆறு 'லெபா' படகுகளாகக் குழுவாகக் கடலில் பயணித்தனர். காலப்போக்கில், இந்த ஒன்று கூடல் ஒரு பெரிய கொண்டாட்டமாக மாறி, பின்னர் 1994-ஆம் ஆண்டில் மலேசியாவின் தேசிய அளவிலான திருவிழாவாக அதிகாரப்பூர்வ அங்கீகாரம் பெற்றது. இன்று இது உலகெங்கிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளைக் கவரும் சபாவின் மிக முக்கிய அடையாளங்களில் ஒன்றாக வளர்ந்து நிற்கிறது.

ஒரு 'லெபா' படகை உற்று நோக்கினால், அதில் ஒட்டுமொத்த பஜாவ் இனத்தின் பாரம்பரிய நடனம், கவிதை, மொழி, ஆடை மற்றும் கைவினைத்திறன் ஆகியவை மிதக்கும் கலை வடிவமாகத் திகழ்வதை நாம் காண முடியும். திருவிழாவின் போது, கடலின் நீல நிற அலைகளுக்கு நடுவே, பிரகாசமான வண்ணமயமான துணிகள், குடைகள் மற்றும் 'சம்புலாயாங்' எனப்படும் பாரம்பரியக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான படகுகள் அணிவகுத்து வரும் காட்சி பார்ப்போரைக் கண் அயர வைக்கும். இருப்பினும், இந்தத் திருவிழாக் கொண்டாட்டங்களுக்குப் பின்னால் ஒரு கவலையும் மறைந்துள்ளது. நவீனக் கால மாற்றங்களால், 'லெபா' படகுகளைச் செய்யும் பாரம்பரியக் கைவினைத் தொழில்நுட்பம் மற்றும் அறிவு இன்றைய தலைமுறையினரிடம் மெல்ல மெல்லக் குறைந்து வருகிறது. இளைஞர்கள் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்காக வேறு இடங்களுக்கு இடம் பெயர்வதால், இந்த நுட்பங்கள் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது.



இந்தச் சவாலை எதிர்கொள்ள இளைய தலைமுறையினர் சிலர் தங்களின் நவீன வழிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். 2023-ஆம் ஆண்டின் 'ராத்து லெபா' அழகுப் போட்டியில் இரண்டாம் இடம் வென்ற 26 வயதான நூருல் ஹலிமா புத்லெய்ன் அதற்கு ஒரு சிறந்த உதாரணம். இவரது குடும்பம் 2008 முதல் ஒரு கலாச்சாரக் கூட்டுறவு அமைப்பை நடத்தி, பாரம்பரிய உடைகள் மற்றும் கலைப் பொருட்களைப் பாதுகாத்து வருகிறது. போட்டிகளின் போது பஜாவ் குபாங் சமூகத்தின் பாரம்பரிய ஆடையான 'பஜாவ் சிக்பிட்' உடையில் தோன்றி, தனது சமூகத்தின் பாரம்பரியத்தை உலகிற்கு எடுத்துரைத்தார். இன்றைய டிஜிட்டல் யுகத்தில், செம்பூர்ணாவை விட்டுத் தள்ளி வாழும் பஜாவ் இளைஞர்கள் கூட, ஃபேஸ்புக், டிக்டாக் மற்றும் யூடியூப் போன்ற சமூக வலைத்தளங்கள் வாயிலாக இந்தத் திருவிழாவைத் தங்களின் டிஜிட்டல் திரைகளில் கண்டு, தங்கள் பூர்வீக அடையாளத்தோடு தொடர்பில் இருக்க முடிகிறது என்று அவர் பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார்.



செம்பூர்ணாவின் நீர்ப்பரப்பில் அழகிய அலங்காரங்களுடன் மிதந்து வரும் 'லெபா' படகுகள், வெறும் கடந்த காலத்தின் நினைவுச் சின்னங்கள் அல்ல. அவை, நவீன உலகிலும் தங்கள் கடல்வழிப் பாரம்பரியத்தை எவ்வித சமரசமும் இன்றி உயிர்ப்போடு வைத்திருக்கத் துடிக்கும் ஒரு சமூகத்தின் அசைக்க முடியாத வாழ்வியல் அடையாளங்கள் ஆகும்!









# நெகிரி செம்பிலான் தேர்தல்:
# ஜோகூர் பாணியில் ஆட்சியைத் தக்க வைக்குமா பக்காத்தான் ஹராப்பான்?

அண்மையில் நடைபெற்ற ஜோகூர் சட்டமன்றத் தேர்தலில் பாரிசான் நேஷனல் கூட்டணி தனது பலமிக்க ஆட்சியை வெற்றிகரமாகத் தற்காத்துக் கொண்டதைத் தொடர்ந்து, மலேசிய அரசியல் களம் இப்போது நெகிரி செம்பிலான் மாநிலத்தை நோக்கித் திரும்பியுள்ளது. வரும் ஆகஸ்ட் 1-ஆம் தேதி நடைபெறவிருக்கும் நெகிரி செம்பிலான் மாநிலத்தின் 16-ஆவது சட்டமன்றத் தேர்தல், தேசிய அளவில் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. மொத்தம் 36 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட இந்த மாநிலத்தில், தற்போதைய பக்காத்தான் ஹராப்பான் தலைமையிலான ஒற்றுமை அரசாங்கம் ஜோகூர் பாணியில் தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளுமா என்ற தார்மீகக் கேள்வி அரசியல் வட்டாரங்களில் பலமாக எழுந்துள்ளது.






முந்தைய 2023 மாநிலத் தேர்தலில் பக்காத்தான் ஹராப்பான் கூட்டணி 17 இடங்களைக் கைப்பற்றி தனிப் பெரும் கூட்டணியாக விளங்கியது.

பக்காத்தான் ஹராப்பான் போட்டியிட்ட 36 தொகுதிகளில் ஜசெக போட்டியிட்ட 11 தொகுதிகளில் வெற்றி பெற்று 100 விழுக்காடு வெற்றியைப் பதிவு செய்தது. சென்னா, பகாவ், நீலாய், லோபாக்,தெமியாங், புக்கிட் கெப்பாயாங், ரஹாங், மம்பாவ், சிரம்பான் ஜெயா, லுக்குட், ரெப்பா ஆகியவையே ஜசெக. 100 விழுக்காடு வெற்றியைப் பதிவு செய்த தொகுதிகளாகும். அதன் உறுப்புக் கட்சிகளான பிகேஆர் 5 தொகுதிகளிலும், அமானா 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.

பாரிசான் நேஷனல், தான் போட்டியிட்ட 36 தொகுதிகளில் 14 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அம்னோ 14 தொகுதிகளில் வெற்றி பெற்ற வேளையில் மசீச.வும், மஇகாவும் எந்தவொரு தொகுதியிலும் வெற்றி பெறவில்லை.

பெரிக்காத்தான் நேஷனல் கூட்டணியில் பாஸ் 3 தொகுதிகளிலும், பெர்சத்து கட்சி 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. இந்நிலையில் தற்போதைய அரசியல் சூழலில், எதிர்க்கட்சிகளின் பலப்பரீட்சைக்கு மத்தியில் பக்காத்தான் ஹராப்பான் மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமருமா என்ற விவாதம் பரவலாக எழுந்தாலும், அக்கூட்டணிக்குச் சாதகமான பல காரணிகளும் சாதனைகளும் களத்தில் முன்னணியில் நிற்கின்றன.

மாநிலத்தில் கடந்த காலங்களில் மந்திரி பெசார் டத்தோ ஸ்ரீ அமினுடின் ஹரூண் தலைமையில் பக்காத்தான் ஹராப்பான் அரசு செயல்படுத்திய மக்கள் நலத் திட்டங்களும், பொருளாதார சீர்திருத்தங்களும் வாக்காளர்கள் மத்தியில் அக்கறைக்குரிய நன்மதிப்பைப் பெற்றுத் தந்துள்ளன.

குறிப்பாக, ஏழை எளிய மாணவர்களின் கல்வி மேம்பாடு, தமிழ்ப்பள்ளிகளின் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு வழங்கப்பட்ட தொடர் நிதியுதவிகள் மற்றும் சிறு வணிகர்களுக்கான பொருளாதார ஊக்கத் தொகை போன்றவை பக்காத்தான் கூட்டணியின் மிக முக்கியச் சாதனைகளாகப் பார்க்கப்படுகின்றன. அதுமட்டுமின்றி, மாநிலத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்தி, அந்நிய முதலீடுகளை ஈர்த்ததன் மூலம் வேலை வாய்ப்புகளைப் பெருக்கிய பெருமையும் இக்கூட்டணிக்கே சேரும்.

வேட்பாளர் தேர்விலும் பக்காத்தான் ஹராப்பான் மிகவும் வியூகத்தோடு களம் இறங்கியுள்ளது. இடைக்கால மந்திரி பெசார் டத்தோ ஸ்ரீ அமினுடின் ஹருண், லிங்கி தொகுதி மற்றும் ஜசெக பொதுச் செயலாளர் அந்தோணி லோக், சென்னா தொகுதி போன்ற மக்கள் செல்வாக்குமிக்க மூத்தத் தலைவர்கள் தங்களின் சாதனைப் பட்டியலோடு மீண்டும் களம் காண்கின்றனர். அத்துடன், உள்ளூர் மட்டத்தில் நல்ல நிர்வாகத் திறனும், இளமைத் துடிப்பும் கொண்ட புதிய வேட்பாளர்களையும் களமிறக்கி வாக்காளர்களின் நம்பிக்கையைத் தக்க வைக்க கூட்டணி தீவிரமாக முயன்று வருகிறது.



இருப்பினும், மாறி வரும் அரசியல் கூட்டணிகளும், தொகுதிப் பங்கீட்டுச் சவால்களும் பக்காத்தான் ஹராப்பானுக்கு முழுமையான வெற்றியைத் தேடித் தருமா அல்லது ஜோகூரைப் போலவே இங்கும் ஆளுங்கட்சியின் ஆதிக்கம் தொடருமா? இதற்கான விடையை வரும் ஆகஸ்ட் 1-ஆம் தேதி நெகிரி செம்பிலான் வாக்காளர்கள் தங்களின் வாக்குகள் மூலம் பதிவு செய்யவிருக்கிறார்கள்.

பிரதமரும் பக்காத்தான் ஹராப்பான் தலைவருமான டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தலைமையில், நெகிரி செம்பிலான் மாநிலத்தில் அதன் கூட்டணிக் கட்சிகளின் வெற்றியை உறுதிச் செய்யக் கடுமையான தேர்தல் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளையில், இத்தேர்தலில் வெளியிடப்படவிருக்கும் பக்காத்தான் கூட்டணியின் தேர்தல் கொள்கை அறிக்கை மக்களின் வளமான வாழ்வாதாரத்திற்கும் மாநிலத்தின் மேன்மைமிகு பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் உன்னதத் திட்டங்களை அறிவிக்கும் என்று கூறப்படுகிறது. இத்தகைய வலுவான வியூகங்களோடு களம் காணும் பக்காத்தான் ஹராப்பான், ஜோகூர் பாணியில் இங்கும் வெற்றிக் கொடியை நாட்டித் தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.





## சென்னா சட்டமன்றத் தொகுதி:

# நெகிரி செம்பிலான் மாநிலத் தேர்தலின் அரசியல் முகம்




**நெகிரி செம்பிலான் மாநிலத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், ஒட்டுமொத்த மலேசிய அரசியல் பார்வையாளர்களின் பார்வையும் 'சென்னா' (N01) தொகுதியின் மீதே பதிந்துள்ளது. போக்குவரத்து அமைச்சரும் ஜசெக.வின் பொதுச் செயலாளருமான அந்தோணி லோக், அந்தச் சட்டமன்றத் தொகுதியை மீண்டும் தற்காத்துக் கொள்வதற்கு போட்டியிடுவது தேர்தலின் அரசியல் எடையை பன்மடங்கு உயர்த்தியுள்ளது.**

கடந்த 2013 முதல் இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய அந்தோணி லோக், கடந்த 2023 தேர்தலில் 2,200 வாக்குகள் பெரும்பான்மையில் வெற்றி பெற்று, இத்தொகுதியைத் தக்க வைக்க தீவிர களப் பணியில் ஈடுபட்டுள்ளார். ஜெலுபு நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சென்னா தொகுதியின் வரலாற்றைப் பார்க்கும் போது, தொடக்கத்தில் தேசிய முன்னணியின் (BN) பலத்த கோட்டையாக இருந்த சென்னா, காலப் போக்கில் பக்காத்தான் ஹராப்பான் (PH) மற்றும் டிஏபியின் முக்கியத் தளமாக மாறியது. மலாய்க்காரர்கள் மற்றும் சீனர்கள் சரிசமமாக வாழும் பல்லின மக்கள் தொகை அமைப்பே இங்கு வெற்றியைத் தீர்மானிக்கும் முக்கியக் காரணியாக உள்ளது. இவர்களுடன் கணிசமான எண்ணிக்கையில் வாழும் ஒராங் அஸ்லி பழங்குடியின மக்களின் ஆதரவும், இந்தியச் சமூகத்தின் பங்கும் தேர்தல் முடிவுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை.

மக்களின் வாழ்வியலைப் பொறுத்தமட்டில், சென்னா ஒரு கிராமப்புற மற்றும் விவசாயப் பொருளாதாரப் பின்னணியைக் கொண்ட பகுதியாகும். ரப்பர் மற்றும் செம்பனைத் தோட்டத் தொழிலை நம்பி பெரும்பான்மையான மக்கள் வாழ்கின்றனர். குறிப்பாக, இப்பகுதியில் விளையும் உயர்தர 'டுரியான்' பழச் சாகுபடி உள்ளூர் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெருமளவில் உதவுகிறது. இத்தகையச் சூழலில், விவசாயிகளின் மானியங்கள், விளைபொருட்களுக்கான சந்தை வாய்ப்புகள் மற்றும் உள்ளூர் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு போன்றவை இங்கு முக்கியத் தேர்தல் விவாதப் பொருளாக உருவெடுத்துள்ளன.







வளர்ச்சித் திட்டங்களைப் பொறுத்தவரை, ஒரு முக்கிய அமைச்சரின் தொகுதி என்பதால் கடந்த சில ஆண்டுகளில் சென்னா உள்கட்டமைப்பில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. கிராமப்புற சாலைகளின் தரம் உயர்வு, தமிழ்ப்பள்ளிகள் மற்றும் சீனப்பள்ளிகளுக்கான கல்வி மானியங்கள், 'மடானி' டிஜிட்டல் இணைய மையங்களின் விரிவாக்கம் ஆகியவை மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளன. மேலும், ஜெலுபு மாவட்டத்தின் இயற்கை வளங்களை மையமாகக் கொண்ட சூழலியல் சுற்றுலா மேம்பாடும் இங்கு புதிய பொருளாதார உத்வேகத்தைத் தந்துள்ளது. முடிவாக, சென்னா சட்டமன்றத் தொகுதி என்பது வெறும் ஒரு சாதாரணத் தொகுதி அல்ல; இது நெகிரி செம்பிலான் மாநிலத் தேர்தலின் அரசியல் பலப்பரீட்சைக் களம். பாரம்பரிய விவசாய வாழ்வியலையும், பல்லினச் சமூக ஒற்றுமையையும் நெஞ்சில் சுமந்து நிற்கும் சென்னா மக்கள், தங்களின் பிராந்திய வளர்ச்சியைத் தொடரப் போகும் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கப் போகும் விதம் ஒட்டுமொத்த மாநில அரசியலின் திசையையும் தீர்மானிக்கும் என்பதில் ஐயமில்லை.





















# நெகிரி செம்பிலானின் புதிய விடியல்:

## PH ஒற்றுமை அரசாங்கத்தின் 36 மக்கள் வேட்பாளர்கள்

மாற்றத்தையும் நிலையான பொருளாதார வளர்ச்சியையும் நோக்கி நடைபோடும் நெகிரி செம்பிலான் மாநிலத்தின் புதிய விடியலாக, பக்காத்தான் ஹராப்பான் தலைமையிலான ஒற்றுமை அரசாங்கத்தின் 36 ஆளுமைமிக்க வேட்பாளர்கள் ஒரே நேர்க்கோட்டில் மக்கள் தீர்ப்புக்காக களம் காண்கின்றனர். அனுபவமிக்க மூத்த தலைவர்கள், துடிப்பான இளைஞர்கள், கல்விமான்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய இந்த 'வெற்றிக் கூட்டணி', நெகிரி செம்பிலான் மாநிலத்தின் பொருளாதாரத்தை மீட்டு, மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஒற்றை இலக்கோடு களம் இறங்கியுள்ளது. மாநில அரசு கொண்டு வந்துள்ள பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைத் தங்கு தடையின்றித் தொடரவும், உங்களின் உரிமைகளையும் உங்கள் பிள்ளைகளின் கல்வி மற்றும் எதிர்காலத்தையும் பாதுகாக்கும் ஒரு நேர்மையான, ஊழலற்ற ஆட்சியை நிலை நிறுத்தவும் பக்காத்தான் ஹராப்பான் கூட்டணியே தகுதியானது. உங்களின் ஒரு வாக்கு, உங்கள் தொகுதியின் அடிப்படை உட்கட்டமைப்பு வளர்ச்சியை மட்டுமன்றி, ஒட்டுமொத்த நெகிரி செம்பிலான் மாநிலத்தின் தலையெழுத்தை மாற்றி எழுதும் வல்லமை கொண்டது. உங்கள் எதிர்காலத்தை வளமாக்க, மாற்று ஆற்றலாகத் திகழும் பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர்களைப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம்! நெகிரி செம்பிலானை முன்னேற்றப் பாதையில் வழிநடத்துவோம்!




























N.16 SERI MENANTI
MOHD KAMARUL ARIFIN BIN MOHD
N.17 SENALING
HANIS ALIMIN
N.18 PILAH
NOORZUNITA BEGUM BT MOHD IBRAHIM
N.19 JOHOL
ZAILAN MUNAWAR
N.20 LABU
AHMAD FAEZ BIN ABDUL RAZAK
N.21 BUKIT KEPAYANG
NICOLE TAN LEE KOON
N.22 RAHANG
SIAU MEOW KONG
N.23 MAMBAU
LEE KAI YET
N.24 SEREMBAN JAYA
S. MUGUNTHAN
N.25 PAROI
USTAZ SHAHIR
N.26 CHEMBONG
DANISH NAZRAN BIN MURAD
N.27 RANTAU
DR. AZIZUL HAKIM MAHDI
N.28 KOTA
USTAZ ALLIF IBRAHIM
N.29 CHUAH
YEW BOON LYE
N.30 LUKUT
CHOO KEN HWA
N.31 BAGAN PINANG
NASIR RAMAN
N.32 LINGGI
AMINUDDIN BIN HARUN
N.33 SRI TANJUNG
DR RAJASEKARAN A/L GUNNASEKARAN
N.34 GEMAS
SITI AISHAH BINTI SEMAN @ OTHMAN
N.35 GEMENCHEH
DATO' ABD LATIF
N.36 REPAH
VEERAPAN SUPERAMANIAM
தொடரட்டும் KEKAL 坚守希望 HARAPAN
HARAPAN





# உலக அரங்கில் மலேசியாவின் பெருமை:

## பினாங்கு ஆளுநரின் உயரிய 'டத்தோ' விருது: தனபதி குமரையா

**உலகளாவிய சுகாதாரத் துறையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக தனது ஈடில்லா மனிதாபிமானச் சேவையால் முத்திரை பதித்து வரும் மலேசிய மருத்துவத் துறையைச் சேர்ந்த தனபதி குமரையாவுக்கு, பினாங்கு மாநில ஆளுநரின் பிறந்தநாள் கொண்டாட்டங்களை முன்னிட்டு உயரிய ''டர்ஜா செத்தியா பங்குவான் நெகிரி' எனும் டத்தோ அந்தஸ்தைத் தாங்கிய D.S.P.N விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.**

பினாங்கின் ''ஆர்டர் ஆஃப் தி டிஃபெண்டர் ஆஃப் ஸ்டேட்'' அமைப்பின் இந்தச் சிறப்புமிக்க கௌரவம், அவருக்கு 'டத்தோ' என்ற உன்னதப் பட்டத்தையும் வழங்கியுள்ளது. மலேசியாவிலும் அதன் பரந்த அண்டை பிராந்தியங்களிலும் மருத்துவ உள்கட்டமைப்பை வலுப்படுத்த அவர் ஆற்றிய தொடர்ச்சியான பங்களிப்பிற்காக இந்த உயரிய அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

கெடா மாநிலத்தின் கோலா கெடாவைப் பூர்வீகமாகக் கொண்ட டத்தோ தனபதி குமரையா, பினாங்கில் வளர்ந்து தனது ஆரம்பக் கல்வியை முடித்தார். பின்னர் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்று, லண்டனில் சந்தைப்படுத்தல் துறையில் இளங்கலைப் பட்டமும், ஆஸ்திரேலியாவில் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டமும் (MBA) பெற்றார். ஆஸ்திரேலியா, மும்பை (இந்தியா), வங்காளதேசம், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பணியாற்றியதன் மூலம் இவரது ஆரம்பக் காலத் தலைமைத்துவப் பண்பு செதுக்கப்பட்டது. பின்னர் உலகின் முன்னணி வணிகப் பள்ளிகளில் ஒன்றான 'இன்சீட்' (INSEAD) அமைப்பில் இணைந்து, தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கான மேம்பட்ட மேலாண்மைத் திட்டத்தை அவர் வெற்றிகரமாக நிறைவுச் செய்தார்.

தற்போது, டத்தோ தனபதி குமரையா, ஆசியப் பசிபிக், மத்தியக் கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா **(APMEA)** பிராந்தியத்திற்கான உலகளாவிய இயக்குநராகவும், பிரெஞ்சு மருத்துவக் கருவி நிறுவனமான வைகோனின் பிராந்தியப் பிரிவான 'வைகோன் ஏசியா' **(Vygon Asia Pte Ltd)** நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகவும் பணியாற்றி வருகிறார். இவரது ஆளுமையின் கீழ், மலேசியா மற்றும் பரந்த ஆசிய பிராந்தியங்களுக்கு நியோனாட்டாலஜி (பிறந்த பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு) மற்றும் வாஸ்குலர் அணுகல் போன்ற அதிநவீன மருத்துவத் தொழில்நுட்பங்களைக் கொண்டுச் சேர்ப்பதில் வைகோன் ஏசியா மிக முக்கியப் பங்காற்றியுள்ளது.

கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்கும் மேலாக, மிக எளிதில் பாதிக்கப்படக்கூடிய பச்சிளம் குழந்தைகள் உள்ளிட்ட தீவிரச் சிகிச்சை நோயாளிகளுக்கு வாழ்வுக்கும் மகிழ்ச்சியும் பணிவும் அடைகிறேன். இந்த அங்கீகாரத்திற்காக பினாங்கு மாநில அரசுக்கும், எனது மருத்துவ மற்றும் சமூகச் சேவைப் பயணத்தில் ஆதரவளித்த என் குடும்பத்தினருக்கும், சக ஊழியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கௌரவம் சுகாதாரம், மனிதாபிமான பணி மற்றும் சமூகச் சேவை மூலம் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயலாற்ற என் உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்துகிறது,'' என்றார்.

அரசியல் மற்றும் மருத்துவத் துறை நிபுணர்களால் பெரிதும் மதிக்கப்படும் டத்தோ தனபதி குமரையா, நரம்பியல் மருத்துவ உளவியலாளரான பேராசிரியர் டாக்டர் நிவாஷினி மோகன் அவர்களை மணந்துள்ளார். இத்தம்பதியருக்கு மிஷா, தானிகா என்ற இரு புதல்விகள் உள்ளனர்.

சுகாதாரத் துறைக்கும் சமூகத்திற்கும் டத்தோ தனபதி குமரையா ஆற்றி வரும் உன்னதப் பணிகள் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து வளரும் என்று அவருக்கு நெருக்கமானவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.




Wedding Fever
proudly presents
Grand Indian
Wedding Expo 2.0
Coming Soon
Stay Tuned
For booth bookings and enquiries, please contact: 012-351 6515




## டத்தோ சந்திரகாந்தன் குப்பன்:

# மனிதம் போற்றும் மாமனிதர்

மலேசியத் திருநாட்டில் கடின உழைப்பாலும், விடாமுயற்சியாலும் உயர்ந்து விளங்கும் மாமனிதர்களைக் கௌரவிப்பது நாட்டின் மரபாகும். அந்த வகையில், தமிழ்ப்பள்ளிகள், அறக்கட்டளைகள், சமூக இயக்கங்கள் மற்றும் வசதி குறைந்த மக்களுக்குப் பிரதிபலன் கருதாது ஆற்றிய தொடர்ச்சியான பங்களிப்புகளுக்காகத் தொழிலதிபர் திரு. சந்திரகாந்தன் குப்பன் அவர்களுக்குப் பினாங்கு மாநில அரசாங்கம் 'டார்ஜா செத்தியா பாங்குவான் நெகிரி' **(DSPN)** எனும் உயரிய டத்தோ பட்டத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளது. பினாங்கு ஆளுநரின் பிறந்த தினத்தையொட்டி வழங்கப்பட்ட இந்த அங்கீகாரம், அவரது உன்னத மனிதநேயத்திற்குச் சான்றாக அமைந்துள்ளது.

பூச்சோங் வாசியான டத்தோ சந்திரகாந்தன் குப்பன், பூச்சோங், சீபீல்டு தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவர். திரு. குப்பன் – திருமதி. அரும்பு தம்பதியரின் ஆறு பிள்ளைகளில் இவர் இரண்டாவது மகனாவார். தனது தொடக்கக் கல்வியைச் சீபீல்டு தோட்டத் தமிழ்ப்பள்ளியில் பயின்றார். இவருடைய ஆரம்பகால வாழ்க்கைப் பாதை கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதையாக இருந்த போதிலும், வாலிப பருவத்திலேயே அயராது உழைத்து முன்னேற வேண்டும் என்ற மன உறுதி அவரிடம் மேலோங்கி இருந்தது.

1996 ஆம் ஆண்டு முதல் சுமார் 12 ஆண்டுகள் ஓர் இரும்புக் கடையில் அயராது வேலை செய்து, அந்தத் தொழிலின் நுணுக்கங்களைத் திறம்படக் கற்றுக் கொண்டார். தான் ஒரு சொந்தத் தொழில் தொடங்க வேண்டும் என்ற லட்சியத்தோடு பாடுபட்ட அவர், 2010 இல் தனது கனவை நனவாக்கினார். தனது சொந்தப் பழைய உலோகக் கடையை **(Scrap Metal)** தொடங்கினார். படிப்படியாக வளர்ந்த இவரது வணிகம், கடந்த 15 ஆண்டுகளில் நாடளாவிய ரீதியில் விரிவடைந்து, இந்த ஸ்கிராப் மெட்டல் தொழில்துறையில் மிகச் சிறந்த வெற்றிக் கொடியை நாட்டியுள்ளது.



"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவத்தின் வாய்மைக்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவர் டத்தோ சந்திரகாந்தன் குப்பன். தொழில்துறையில் இமாலய வெற்றி பெற்றாலும் எளிமையும், தன்னடக்கமும் நிறைந்தவராகவே விளங்குகிறார். தான் ஒரு தமிழ்ப்பள்ளி மாணவர் என்பதை எப்பொழுதும் பெருமையோடு கூறிக் கொள்ளும் இவர், தமிழ்ப்பள்ளி மாணவர்களைத் தத்தெடுத்து உதவுவது மற்றும் தமிழ்ப்பள்ளி வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு தர்ம காரியங்களைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

வாழ்க்கை என்பது வெறும் வியாபாரம் அல்ல, அது மனிதம் சார்ந்தது என்ற உன்னதக் கொள்கையைக் கொண்டவர். யாரேனும் துன்பப்படுவதைக் கண்டால் உடனே உதவும் ஈகை குணம் கொண்டவர். ஹரிராயா, தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் வசதி குறைந்த மக்களுக்குக் கணிசமான தொகையைச் செலவழித்து அன்பளிப்புகள் வழங்கி வருகிறார். இதன் மூலம் ஆண்டுதோறும் சுமார் 150 குடும்பங்கள் பயனடைகின்றனர். மேலும், ஏதேனும் பேரிடர் ஏற்பட்டால் நேரடியாகச் சென்று நிலைமையைக் கண்டறிந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, நீர், தளவாடப் பொருட்கள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் போன்றவற்றுக்கு உதவி வழங்கித் தோள் கொடுக்கிறார்.

வெற்றி என்பது ஒருவரின் பண பலத்தினால் மட்டுமல்ல, அவர் சமூகத்திற்கு எவ்வளவு திரும்பத் தந்திருக்கிறார் என்பதைக் கொண்டே அளவிடப்படுகிறது. "பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமை உடைய செயல்" (குறள் 975) என்ற வரிகளுக்கு இலக்கணமாகத் திகழும் டத்தோ சந்திரகாந்தன் குப்பன் அவர்களின் சாதனைகள் மலேசியத் தமிழர்களுக்குப் பெருமை சேர்ப்பதாகும். பல்வேறு சமூகத்தினரோடு நல்லிணக்கமாக வாழும் டத்தோ சந்திரகாந்தன் குப்பன் அவர்களுக்கு மேலும் பல பட்டங்களும், நற்பேறுகளும் வந்து குவிய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.



# மனமார்ந்த வாழ்த்துகள்!

## Dato' Chandrakanthan Kuppan



பினாங்கு மாநில ஆளுநர்
**Tun Dato' Seri Utama Haji Ramli Ngah Talib** அவர்களின் 85-ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சாதனையாளர், செந்தமிழர் செல்வர் எங்களின் மதிப்புமிகு சந்திரகாந்தன் குப்பன் அவர்களுக்கு, **Darjah Setia Pangkuan Negeri (D.S.P.N.)** எனும் உயரிய அந்தஸ்தைத் தாங்கிய **"டத்தோ" விருது** வழங்கிச் சிறப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த உயரிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ள டத்தோ சந்திரகாந்தன் குப்பன் அவர்கள், மென்மேலும் பல உன்னத விருதுகளைப் பெற்று, நாட்டிற்கும் மக்களுக்கும் தொடர்ந்து சிறப்பான முறையில் சேவையாற்ற எங்களின் மனமார்ந்த நல்வாழ்த்துகளை அன்போடு தெரிவித்துக் கொள்கிறோம்!

### வாழ்த்துவோர்:

MS WASTE MANAGEMENT SDN BHD
SKY LPS RESOURCE
MGS METAL SDN BHD
WIN TECH SPRING ENT
SHELTER SECURITY SERVICES SDN BHD
ARUSUVAI KITCHEN
H.H.HARDWARE SDN BHD
HS JAYA LOGISTICS SDN BHD
PASAR MINI HALBERT
ROBUSTA SECURITY SERVICES SDN BHD
SS PAKAT SDN BHD
RYB AIRCOND AND ELECTRIC SERVICES

CHHA JAYA LOGISTICS SDN BHD
LCM MAHA ENERGY SDN BHD
DONSUN SPARKLES MANUFACTURING SDN BHD
CASS RESOURCES SDN BHD
VJ DRAGON RED CRACKER SDN BHD
SUPER METAL TRADING
FIVE DIMENSION SDN BHD
ASIA SMART SERVICE
INFINITE COMPUTER SOLUTIONS
CURRY CHETTINAD SDN BHD
KELAB SUKAN DAN KEBAJIKAN ONE UNITY PUCHONG
AUTO RECYCLING & DISPOSAL TRADING

HEPELS ENTERPRISE
MSTS TOP SERVICE
RAO ICEBERG FROZEN
GF CONSULTANT
MASH ZYANATY SDN BHD
KUMPULAN PENYOKONG
CASTFIELD PUCHONG
RS MILLENIUM ENTERPRISE
SURE RICH MANAGEMENT
KALAI COCONUT ENTERPRISE
KALAI IMPACT
BLUE DYNAMIC
MURUGAN SHOP






## வர்த்தகச் சாம்ராஜ்யத்தில் தடம் பதிக்கும்

# ‘சுபம் கேஷ் அண்ட் கேரி’ டத்தோ முருகேசன் பெரியண்ணன்

**சுய உழைப்பும், தளராத தன்னம்பிக்கையும், சமுதாயத்தின் மீதான அக்கறையும் ஒரு மனிதனை எந்தவோர் உயரத்திற்கும் கொண்டுச் செல்லும் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார் பினாங்கு மாநிலத்தின் முன்னணி இந்திய வர்த்தகர்களில் ஒருவரான முருகேசன் பெரியண்ணன். வர்த்தகத் துறையில் சாதனை படைப்பதோடு நின்று விடாமல், தமிழ்மொழி, கல்வி மற்றும் ஆன்மீகப் பணிகளுக்குத் தனது பங்களிப்பை வாரி வழங்கி வரும் இவரின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி, பினாங்கு மாநில ஆளுநர் துன் டத்தோ ஸ்ரீ உத்தாமா ஹாஜி ராம்லி பின் ஙா தாலிப் அவர்கள், இவருக்கு மாநிலத்தின் உயரிய அந்தஸ்தைக் கொண்ட** DSPN (Darjah Setia Pangkuan Negeri) **எனும் விருதை வழங்கி கௌரவித்துள்ளார். இந்த உயரிய விருதானது டத்தோ முருகேசன் பெரியண்ணன், சமுதாயத்திற்கும், சமூகவியல் நடவடிக்கைகளுக்கும் ஆற்றிய பணிக்கு கிடைக்கப்பெற்ற உயரிய அங்கீகாரமாகும்.**

வர்த்தகத் துறை என்பது வெறும் லாபத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல, அது மக்களின் தேவையை அறிந்து கொள்ளும் கலை என்பதை டத்தோ முருகேசன் மிக இளமையிலேயே கற்றுக் கொண்டார். வர்த்தகத் துறையில் 7 ஆண்டு காலம் மிகக் கடினமான உழைப்போடு பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக் கொண்ட அவர், தனது சொந்த வணிகப் பயணத்தை கடந்த 2006-ஆம் ஆண்டு பினாங்கு, பிறை பகுதியில் ஒரு சிறிய தளத்தில் ‘சுபம் கேஷ் அண்ட் கேரி’ (Subam Cash & Carry) என்ற பெயரில் தொடங்கினார்.

அவரது நேர்மையும், தரமான பொருட்களை நியாயமான விலையில் வழங்கும் உத்தியும் வாடிக்கையாளர்கள் மத்தியில் அசைக்க முடியாத நம்பிக்கையை ஏற்படுத்தியது. அதன் விளைவாக, கடந்த 20 ஆண்டு கால வர்த்தகப் பயணத்தில் பினாங்கு மற்றும் அதன் அண்டை மாநிலப் பகுதிகளான பட்டர்வொர்த், நிபோங் திபால், பினாங்கு லிட்டில் இந்தியா, கெடா, பாடாங் செராய் ஆகிய முக்கியப் பகுதிகளில் ‘சுபம் கேஷ் அண்ட் கேரி’யின் கிளைகளை வெற்றிகரமாகத் திறந்து தனது வணிகச் சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தியுள்ளார். இது மட்டுமின்றி, உணவுத் துறையிலும் தடம் பதித்து, ஓர் உணவகத்தையும் வெற்றிகரமாக நடத்தி மலேசியர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.








தான் எட்டியுள்ள இந்த இமாலய வளர்ச்சிக்குத் தனக்குத் துணையாக நின்றவர்களை டத்தோ முருகேசன் ஒரு போதும் மறந்ததில்லை. இந்த உன்னதமான தருணத்தில், தங்களின் மீது தொடர்ந்து நம்பிக்கை வைத்து ஆதரவளித்து வரும் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களுக்கும், நிறுவனத்தை ஒரு குடும்பமாகப் பாவித்து, இரவு பகலாகத் தோளோடு தோள் நின்று உழைக்கும் அர்ப்பணிப்புமிக்க தனது பணியாளர்களுக்கும் அவர் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறார். “அவர்களின் பேராதரவும் உழைப்பும் இல்லையென்றால் ‘சுபம் கேஷ் அண்ட் கேரி’ என்ற இந்த ஆலவிருட்சம் சாத்தியப்பட்டிருக்காது” என்று நெகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார்.

ஒரு வணிகர் பொருளை ஈட்டுவதோடு தனது கடமை முடிந்தது

என்று நினைக்கும் இந்த காலத்தில், டத்தோ முருகேசன் பெரியண்ணன் சமுதாயத்தின் வேர்களைக் காக்கும் அரணாகத் திகழ்கிறார். நமது அடுத்த தலைமுறையின் அடையாளமாக விளங்கும் தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் அவர் தொடர்ந்து பெரும் நிதியுதவிகளை வழங்கி வருகிறார். அதேபோல், நமது பண்பாட்டின் தொட்டில் போன்ற இந்துத் திருத்தலங்கள், ஆலயத் திருப்பணிகள் மற்றும் ஆன்மீக நற்பணிகளுக்கும் வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்கிறார். இவரின் கொடை உள்ளம் பினாங்கு மாநிலத்தில் பல ஏழை, எளிய குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளது என்றால் அது மிகையாகாது.

தனக்குக் கிடைத்துள்ள இந்த உயரிய 'னுளுஞகூ டத்தோ' விருது மற்றும் சமூ கப் பணிகளுக்குத் துணையாகவும், நல்வழிகாட்டியாகவும் இருந்த அனைத்து நல்நெஞ்சங்களுக்கும் டத்தோ முருகேசன் பெரியண்ணன் தனது மனமார்ந்த நன்றிகளை நன்றியுணர்வுடன் சமர்ப்பிக்கிறார். "இந்த உயரிய விருதை வழங்கி கௌரவித்த பினாங்கு மாநில ஆளுநருக்கும் மற்றும் பினாங்கு மாநில அரசாங்கத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகள். எப்போதும் எனது நற்பணிகளுக்குப் பேராதரவாகத் திகழும் பினாங்கு மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ ஸ்ரீ சுந்தராஜு சோமு, சட்டமன்ற உறுப்பினர் கேல்வின் என்ற குமரன் கிருஷ்ணன், பெலித்தா நிறுவனத்தின் உரிமையாளர் டான் ஸ்ரீ ரமேஷ், நாசி கண்டார் கமலியா உரிமையாளர் திரு. பாலா ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றி".

வர்த்தக உலகில், வெறும் 7 ஆண்டு கால அனுபவத்தைக் கொண்டு, இருபதே





ஆண்டுகளில் பல கிளைகளை உருவாக்கி, அசுர வளர்ச்சி பெற்ற 'சுபம் கேஷ் அண்ட் கேரி'யின் பயணம் ஒரு வரலாற்றுச் சாதனை. வணிக வெற்றியைத் தாண்டி, தமிழ்ப்பள்ளிகளையும், ஆன்மீகத்தையும் தாங்கிப் பிடிக்கும் டத்தோ முருகேசன் பெரியண்ணன் போன்ற தூண்கள்தான் நம் சமுதாயத்தின் உண்மையான பலம். உழைப்பால் உயர்ந்து, ஈகைக் குணத்தால் சமுதாயத்தின் நெஞ்சங்களில் இடம் பிடித்துள்ள டத்தோ முருகேசன் பெரியண்ணன் அவர்களின் வர்த்தகப் பயணமும், சமூகச் சேவைகளும் இன்னும் பல தலைமுறைகளுக்குத் தொடர நாமும் அவரை மனதார வாழ்த்துகிறோம்!

















# உலு யாம் சீனப் புதிய கிராமம்

மலேசியாவின் சிலாங்கூர் மாநிலத்தில், உலு சிலாங்கூர் மாவட்டத்தில் இயற்கையோடு இயைந்து அமைந்துள்ள ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கப் பகுதி உலு யாம் (Ulu Yam). நவீன வளர்ச்சிக்கு மத்தியிலும் தனது பழமை மாறாத அடையாளத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ள 'உலு யாம் சீனப் புதிய கிராமம்', மலேசியாவின் அவசரநிலைக் கால வரலாற்றையும், கலாச்சாரச் செழுமையையும் பறைசாற்றும் ஒரு முக்கிய இடமாகும்.

## ஒரு வரலாற்றுப் பின்னணி

இந்தக் கிராமத்தின் தோற்றம் 1950-களின் முற்பகுதியில் மலாயா அவசரநிலைக் காலத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் கம்யூனிச ஆதரவாளர்களிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்குத் தேவையான உதவிகள் செல்வதைத் தடுக்கவும் நடைமுறைப்படுத்திய 'பிரிக்ஸ் திட்டத்தின்' கீழ் இந்தக் கிராமம் உருவாக்கப்பட்டது.

## பாதுகாக்கப்பட்ட குடியிருப்பு

காடுகளுக்கு அருகில் சிதறி வாழ்ந்த சீனக் குடும்பங்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு, முள்வேலிகளால் சூழப்பட்ட இந்தப் பாதுகாக்கப்பட்ட குடியிருப்பில் குடியேற்றப்பட்டனர். இன்று அந்த முள்வேலிகள் மறைந்து விட்டாலும், அங்குள்ள வீடுகளும் தெருக்களும் அந்தக் காலத்தின் வலிகளையும், மக்களின் பிழைப்புத் திறனையும் இன்றும் நினைவூட்டுகின்றன.

## இரண்டு பகுதிகள் - இரண்டு முகங்கள்

நிர்வாக ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் உலு யாம் இரண்டு முக்கியப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று 'உலு யாம் லாமா' (பழைய நகரம்), மற்றொன்று 'உலு யாம் பாரு' (புதிய நகரம்). இதில் உலு யாம் பாரு என்பது முறையான திட்டமிடலுடன் அமைக்கப்பட்ட புதிய கிராமமாகும். இந்தக் கிராமம் கோலாலம்பூருக்கும் கெந்திங் மலைக்கும் இடையிலான பாதையில் அமைந்துள்ளதால், பயணிகளுக்கு இது ஒரு சிறந்த இளைப்பாறும் இடமாகத் திகழ்கிறது.

## இரண்டு பகுதிகள் - இரண்டு முகங்கள்


சுங்கை துவா


பத்து அணை


மலர் பண்ணை



## உலு யாம் லோ மீ - ஒரு சுவைச் சின்னம்



உலு யாம் என்ற பெயரைக் கேட்டாலே பலருக்கும் நினைவுக்கு வருவது அங்குள்ள புகழ்பெற்ற 'லோ மீ' உணவாகும். இது தடிமனான சாறு, புளிப்பான வினிகர் மற்றும் கைவினை நூடுல்ஸால் தயாரிக்கப்படும் ஒரு வகைச் சீன உணவாகும். 1950-களில் ஹொக் சூன் கீ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தச் சுவை, இன்று உலு யாமை ஒரு 'உணவுச் சுற்றுலா' மையமாக மாற்றியுள்ளது. வார இறுதி நாட்களில் நாடு முழுவதிலும் இருந்து மக்கள் இந்த உணவின் அசல் சுவையை அனுபவிக்க இங்கு திரள்கின்றனர்.

இயற்கை ஆர்வலர்களுக்கு உலு யாம் ஒரு சொர்க்கமாகும். இங்குள்ள 'சுங்கை துவா' பொழுதுபோக்குக் காடு மற்றும் அங்குள்ள குளிர்ந்த நீர்வீழ்ச்சிகள் குடும்பத்துடன் பொழுதைக் கழிக்க ஏற்றவை. மேலும், பத்து அணை **(Batu Dam)** பகுதி புகைப்படக் கலைஞர்களுக்குப் பிடித்தமான அழகிய பின்னணியைக் கொண்டுள்ளது. சமீபகாலமாக, இங்குள்ள மலர்ப் பண்ணைகள் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து வருகின்றன.

## கலாச்சார செழுமை

இங்குள்ள சீனப் பெருமக்களின் கலாச்சாரம் அவர்களின் பழமையான கோயில்களிலும், பாரம்பரியக் கட்டிடக் கலையிலும் இன்றும் பிரதிபலிக்கிறது. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயம், சிறிய அளவிலான வணிகம் மற்றும் சுற்றுலா சார்ந்த தொழில்களைச் செய்து வருகின்றனர். இளைய தலைமுறை நகரங்களை நோக்கிச் சென்றாலும், பண்டிகைக் காலங்களில் இந்தக் கிராமம் புதிய பொலிவு பெற்று விழாக் கோலம் பூணும்.

சிலாங்கூர் உலு யாம் சீனப் புதிய கிராமம் என்பது வெறும் செங்கற்களாலும் மரங்களாலும் ஆன குடியிருப்பல்ல; அது ஒரு சமூகத்தின் வரலாறு, போராட்டம் மற்றும் கலாச்சாரத்தின் சாட்சியாகும். அரசாங்கம் இந்தப் பகுதியை ஒரு பாரம்பரியத் தலமாக அங்கீகரிக்க முயன்று வரும் வேளையில், வரலாற்றையும் இயற்கை அழகையும் விரும்பும் எவரும் ஒருமுறை கட்டாயம் செல்ல வேண்டிய இடமாக உலு யாம் திகழ்கிறது.









Dato' AR

Home | About Dato' | News & Media | CONTACT US



# YBhg. Dato' Anand Raja
DIMP, DSAP

— FOUNDER AND GROUP CHIEF EXECUTIVE OFFICER – EURO GROUP (M) BERHAD

## Entrepreneur, Philanthropist, and Visionary Corporate Leader.

As the Founder and Group Chief Executive Officer of Euro Group (M) Berhad, he has played a defining role in transforming the company's growth from a small local enterprise into a diversified conglomerate with interests in construction, engineering, logistics, and international business.

KNOW MORE













COMMUNITY AND PHILANTHROPY

## Empowering Communities Through Compassion

Leading with purpose beyond profit, fostering education, healthcare, and inclusivity for lasting social progress.

### Championing Social Responsibility

Beyond business success, Dato' Anand Raja believes true leadership is measured by the positive impact created in society.

### Empowering Through Education

Education is the foundation for lasting progress and equal opportunity.

### Advancing Healthcare and Community Welfare

Promoting access to quality healthcare and improving lives in underserved communities.

### Building Inclusive and Sustainable Growth

Creating a future where equality, compassion, and opportunity thrive together.



# கிள்ளான் நெடுஞ்சாலையின் 'எலும்புக்கூடு' மாளிகை

**கோலாலம்பூரிலிருந்து கிள்ளான் நோக்கி கூட்டரசு நெடுஞ்சாலையில் பயணிக்கும் எவருக்கும் அந்த அனுபவம் ஏற்பட்டிருக்கும். வாகனங்களின் இரைச்சல், மின்னும் விளக்குகள் என பரபரப்பாக இருக்கும் அந்தச் சாலையில், 'கிள்ளான் ஹோக்கியான் மண்டபத்தை' நெருங்கும் போது மட்டும் ஒருவித சில்லிப்பு உடலைத் தழுவும். இடதுபுறம் நிமிர்ந்து பார்த்தால், வானத்தை நோக்கி நீண்டிருக்கும் ஒரு பிரம்மாண்டமான கான்கிரீட் எலும்புக்கூடு நம்மை வெறித்துப் பார்க்கும்.**

அதுதான் 'The Boss Service Suites'. ஆனால் இன்று அது ஒரு கட்டடம் அல்ல; அந்தப் பகுதியின் தீராத ஒரு 'திகில் அடையாளம்'. ஏன் இந்தக் கட்டடம் இவ்வளவு பயமுறுத்துகிறது? அதன் விசித்திரமான கட்டமைப்புதான் முதல் காரணம். வழக்கமான கட்டடங்களைப் போல இல்லாமல், ஒரு ராட்சத 'சீஸ் கிரேட்டர்' போல ஓட்டைகளும், மெல்லிய இரும்புச் சட்டங்களும் கொண்டு அது காட்சியளிக்கிறது. பல ஆண்டுகளாக மழையிலும் வெயிலிலும் ஊறிப்போய், பாசி பிடித்து, கறுத்துப்போய்க் கிடக்கும் அதன் சுவர்கள், தூரத்திலிருந்து பார்க்கும் போது ஏதோ ஒரு மாபெரும் பேய் உருவம் வாயைப் பிளந்து நிற்பது போன்ற பிரமையை ஏற்படுத்துகிறது. இந்தக்



கட்டுரையை எழுதும் போதே என் விரல்கள் நடுங்குகின்றன. அந்தப் பாதையில் செல்லும் ஒவ்வொரு முறையும் என் மனம் கேட்பது ஒன்றுதான்: "அந்த மெல்லிய அடித்தளம் எவ்வளவு காலம் தாங்கும்?" பார்ப்பதற்கே பிடுங்கிக் கொண்டு விழப் போவது போல் இருக்கும் அதன் தோற்றம், ஒரு பொறியியல் அதிசயம் என்பதைத் தாண்டி ஒரு பொறியியல் பயங்கரமாக உருவெடுத்துள்ளது. 2014-ல் திடீரென நிறுத்தப்பட்ட அந்தப் பணிகள், இன்றும் அப்படியே உறைந்து போயுள்ளன. பாதி



கட்டப்பட்ட நிலையில் துருப்பிடித்த கம்பிகள், அந்தரத்தில் தொங்கும் சிமெண்ட் சிலாப்புகள் என அது ஒரு மரணப் பொறி போலத் தெரிகிறது.

அந்த 20-க்கும் மேற்பட்ட மாடிகளில் உள்ள ஜன்னல்கள் வழியே உள்ளே பார்த்தால், இருளைத் தவிர வேறொன்றும் தெரியாது. ஆனால், அந்த இருளுக்குள் ஏதோ ஒன்று நகர்வது போன்ற உணர்வு பல பயணிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. இரவு நேரங்களில் பலத்த காற்று வீசும் போது, அந்தக் கட்டடத்தின் ஓட்டைகள் வழியாகக் காற்று புகுந்து வெளிவரும் ஓசை, ஏதோ ஓர் ஆன்மா ஓலமிடுவது போலவே இருக்கும். கைவிடப்பட்ட கிரீன்கள் மற்றும் இயந்திரங்கள் நிலவொளியில் பார்க்கும் போது, ஏதோ ஒரு ராட்சத பூதம் அந்தக் கட்டடத்தைக் காவல் காப்பது போலத் தோன்றும்.

ஒரு பத்திரிகையாளராக எத்தனையோ விபத்துகளையும், சம்பவங்களையும் பார்த்திருக்கிறேன். ஆனால், கிள்ளானின் இதயப் பகுதியில் மக்கள் நடமாட்டம் மிகுந்த இடத்திற்கு அருகிலேயே, இவ்வளவு பெரிய 'அசுரன்' அமைதியாகக் காத்திருப்பதுதான் உண்மையான பீதி. நிதி நெருக்கடியால் கைவிடப்பட்டதா அல்லது அந்த இடத்தின் 'வாஸ்து' சரியில்லையா? எது எப்படியோ, கடந்து செல்லும் ஆயிரக்கணக்கான கண்களில் இது பயத்தை மட்டுமே விதைக்கிறது.

அரசாங்கம் இதை இடிக்கவோ அல்லது சீரமைக்கவோ முயற்சிகள் எடுக்கலாம். ஆனால், கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக அந்தப் பாதையில் செல்பவர்களின் கனவில் வந்து போகும் அந்த 'கான்கிரீட் பேய்', கிள்ளானின் ஒரு மாறாத வடுவாகவே மாறிவிட்டது. அடுத்த முறை நீங்கள் அந்தப் பக்கமாகச் சென்றால், சற்று கவனித்துப் பாருங்கள்... அந்தக் கட்டடம் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்!



# ஆண்கள் நிறைந்த ஊடக உலகில் ஒரு சகாப்தம்: லக்ஷ்மி நடராஜனின் 55 ஆண்டுகாலச் சாதனைப் பயணம்

**1960-களில் பெண்கள் அலுவலக வேலைக்குச் செல்வதே அரிதான ஒரு காலம். அத்தகையச் சூழலில், ஆண்கள் மட்டுமே நிறைந்த ஒரு செய்தி அறையில், ஓர் இளம் பெண்ணாகத் தனது காலடியை எடுத்து வைத்தவர் லக்ஷ்மி நடராஜன். 'நியூ ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்' (New Straits Times) ஆங்கிலப் பத்திரிகையின் முதல் பெண் செய்தியாளரான இவர், தனது 55 ஆண்டுகால அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்கிறார்.**





தனது ஆறாம் படிவத் தேர்வு முடிவுகளுக்காகக் காத்திருந்த லக்ஷ்மி, சும்மா இருக்கப் பிடிக்காமல் பத்திரிகையாளர் வேலைக்கு விண்ணப்பித்தார். நேர்காணலின் போது, "ஏன் இந்த வேலைக்கு வந்தாய்?" என்று கேட்டதற்கு, "தேர்வு முடிவுக்காகக் காத்திருக்கிறேன், சும்மா இருக்கப் பிடிக்கவில்லை" என்று ஒரு வெள்ளை உள்ளத்தோடு பதிலளித்தார். அவரது ஆங்கிலப் புலமையைக் கண்டு வியந்த ஆசிரியர் லெஸ்லி ஹாஃப்மேன், 150 வெள்ளி மாதச் சம்பளத்தில் அவரைப் பணியில் அமர்த்தினார்.

லக்ஷ்மி வேலைக்குச் சேர்ந்த போது, சக ஆண் ஊழியர்கள் அவரை ஏளனமாகப் பார்த்தனர். "இது ஆண்களுக்கான உலகம், நீ இங்கே நீடிக்க மாட்டாய்" என்று முகத்திற்கு நேராகவே கூறினர். அலுவலகத்தில் ஆண்கள் சரளமாகப் பேசும் கெட்ட வார்த்தைகளைக் கேட்டு ஆரம்பத்தில் திகைத்தாலும், தனது இலட்சியத்தில் உறுதியாக இருந்தார் லக்ஷ்மி. எதற்கும் அஞ்சாமல் உழைத்ததால், காலப்போக்கில் அவர்கள் லக்ஷ்மியை 'தங்களில் ஒருவராக' ஏற்றுக் கொண்டனர்.



## நீதிமன்றங்களின் ராணி

லக்ஷ்மியின் திறமைக்குச் சான்றாக அவருக்குக் கிடைத்த பட்டம்தான் நீதிமன்றங்களின் ராணி. நீதிமன்றச் செய்திகளை துல்லியமாகச் சேகரிப்பதிலும், நீதிபதிகளுடன் நல்லுறவைப் பேணுவதிலும் அவர் சிறந்து விளங்கினார். பல முக்கியக் கொலை வழக்குகள் மற்றும் அரசியல் ஊழல் வழக்குகளைத் துணிச்சலாகத் தந்து புகழ் பெற்றார். தனது வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு சம்பவமாக லக்ஷ்மி இதைக் குறிப்பிடுகிறார். கோலாலம்பூர், ஜாலான் புடு சாலையில் ஓர் ஆட்டைத் திரிய விட்டதாக ஒரு நபர் மீது வழக்குத் தொடரப்பட்டது. அந்த ஆடு நீதிமன்றத்தில் ஒரு 'சாட்சிப் பொருளாக' கொண்டு வரப்பட்டது. அப்போது எதிர்பாராத விதமாக அந்த ஆடு லக்ஷ்மியைத் துரத்தத் தொடங்கியது. புடவை அணிந்திருந்த லக்ஷ்மி, தனது கம்பீரம் குறையாமல் அங்கிருந்து தப்பிக்க ஓடியது அங்கிருந்தவர்களைச் சிரிக்க வைத்தது. அந்தப் புகைப்படம் இப்போதும் அவரிடம் பொக்கிஷமாக உள்ளது.



## உலகத் தலைவர்களுடன் ஒரு சந்திப்பு

ஜெர்மன், பெர்லின் நகரில் நடந்த உயர்தர இதழியல் படிப்பில் உலக அளவில் முதலிடம் பிடித்தார் லக்ஷ்மி. 1972-ல் மலேசியாவிற்கு வருகை தந்த இங்கிலாந்து அரசியார் இரண்டாம் எலிசபெத்துடன் தேநீர் அருந்தும் சிறப்பு அழைப்பைப் பெற்றார். மேலும், அமெரிக்க அதிபரின் மனைவி லேடி பேர்ட் ஜான்சன் போன்ற பல உலகப் புகழ்பெற்ற ஆளுமைகளையும் அவர் நேர்காணல் செய்துள்ளார்.

தட்டச்சு இயந்திரங்களில் தொடங்கி இன்றைய ஸ்மார்ட்போன் காலம் வரை இதழியலின் மாற்றங்களை அவர் கண்டுள்ளார். "அன்று மழையிலும் வெயிலிலும் அலைந்து செய்தி சேகரித்தோம், இன்று ஒரு குறுஞ்செய்தி மூலம் தகவல்களைப் பெற்று விடுகிறார்கள்" என்று கால மாற்றத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

## தலைமை நீதிபதியுடன் மோதல்

ஒருமுறை, ஒரு புதிய 'தொழிலாளர் நீதிமன்றம்' (Industrial Court) தொடங்கப்பட உள்ளதை அறிந்து, லக்ஷ்மி அது குறித்து ஒரு நீதிபதியை நேர்காணல் செய்தார். அந்தச் செய்தி வெளியானவுடன், அப்போதைய மலேசியத் தலைமை நீதிபதி கடும் கோபமடைந்தார். அந்த அறிவிப்பைத் தாம்தான் வெளியிட்டிருக்க வேண்டும் என்று அவர் கருதினார்.

உடனடியாக லக்ஷ்மியைத் தனது அறைக்கு வரவழைத்த நீதிபதி, "எனது நீதிபதிகளை நேர்காணல் செய்ய உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்று அதிகாரத்தோடு கேட்டார். ஆனால் லக்ஷ்மி அஞ்சாமல், "உங்கள் நீதிபதிகள் செய்தியாளர்களிடம் பேசக்கூடாது என்றால், அதை நீங்கள்தான் அவர்களிடம் சொல்ல வேண்டும். தவிர, அங்கு பல செய்தியாளர்கள் இருந்தனர், என்னை மட்டும் ஏன் கேட்கிறீர்கள்?" என்று பதிலடி கொடுத்தார்.

அதற்கு அந்த நீதிபதி, "மற்றவர்களைப் பற்றி எனக்குக் கவலை இல்லை, நான் 'ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்' (Straits Times) பத்திரிகையை மட்டுமே படிக்கிறேன்!" என்று கூறினார். கோபத்தில் அவர் சொன்ன பதில், உண்மையில் லக்ஷ்மியின் பத்திரிகைக்குக் கிடைத்த அங்கீகாரமாக மாறியது. லக்ஷ்மி ஒரு சிறு புன்னகையோடு அங்கிருந்து வெளியேறினார்.

லக்ஷ்மி ஆரம்பக்காலத்தில் செய்தி எழுதும் போது, அவரது தலைமைச் செய்தியாளர் திருப்தியடையும் வரை ஒரே செய்தியை நான்கு முறைக்கும் மேலாகத் திரும்பத் திரும்ப எழுதச் சொல்லுவாராம். அந்த அளவுக்குக் கண்டிப்பான சூழலில் வளர்ந்ததால்தான், பின்னாளில் அவர் "நீதிமன்றங்களின் ராணி" என்று அழைக்கப்பட்டார்.

மலேசியாவின் மூன்றாவது பேரரசியார் மற்றும் அமெரிக்க அதிபர் லிண்டன் ஜான்சனின் துணைவியார் பேர்ட் ஜான்சன் (Lady Bird Johnson) ஆகியோரை நேர்காணல் செய்த மிகச் சிலரில் இவரும் ஒருவர்.

1978-ல் ஜெர்மனியில் நடந்த இதழியல் பயிற்சியில், 28 உலக நாடுகளின் செய்தியாளர்களில் முதலிடம் பிடித்து மலேசியாவிற்குப் பெருமை சேர்த்தார்.

இறுதியில் லக்ஷ்மி கூறுவது என்னவென்றால், அன்று காகிதத்திலும் தட்டச்சு இயந்திரத்திலும் இருந்த அந்த "உயிரோட்டமான இதழியல்", இன்று மின்னணு மயம் ஆகிவிட்டாலும், உண்மைக்கான தேடல் என்றும் மாறாது என்பதே.

லக்ஷ்மி நடராஜன் இன்று பல இளம் பெண் பத்திரிகையாளர்களுக்கு ஒரு முன்னோடியாகவும், உத்வேகமாகவும் திகழ்கிறார்.



EIIR

The British High Commissioner is commanded by Her Majesty The Queen to invite

Mrs. Lakshmi Natarajan

to a Reception at the Istana Tetamu on Tuesday, 22nd February, 1972 at 5 p.m.

Dress: Lounge Suit

A reply is requested to British High Commission, Wisma Damansara, Kuala Lumpur.

மலேசியா சுதந்திரம் அடைந்த பிறகு, 1967-ஆம் ஆண்டு பேங்க் நெகாரா மலேசியா தனது முதல் வரிசை நாணயங்களை வெளியிட்டது. இதில் 1 சென் நாணயமும் அடங்கும். ஆரம்பத்தில் இந்த நாணயம் தூய செம்பினால் (Bronze) செய்யப்பட்டது. பின்னர், 1989-இல் வெளியிடப்பட்ட இரண்டாவது வரிசை நாணயங்களில் இது செம்பு பூசப்பட்ட எஃகு பொருளாக மாற்றப்பட்டது. இந்த நாணயத்தின் ஒரு பக்கத்தில் மலேசியாவின் பாரம்பரிய விளையாட்டான 'வாவு புலான்' எனப்படும் பட்டத்தின் படமும், மறுபக்கத்தில் நாட்டின் தேசிய மலரான செம்பருத்தியும் பொறிக்கப்பட்டிருந்தன. பல தசாப்தங்களாக மலேசியர்களின் அன்றாட சில்லறை வர்த்தகத்தில் இந்த ஒரு காசு நாணயம் மிக முக்கியப் பங்கு வகித்தது.









# இல்லாத நாணயமும் ஏமாறும் பயனீட்டாளரும்: மலேசியச் சந்தையில்




ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பில் அந்நாட்டின் ஆகச் சிறிய நாணயம் மிக முக்கிய அடித்தளமாக விளங்குகிறது. மலேசியாவைப் பொறுத்தமட்டில், 1 சென் நாணயம் அத்தகைய ஒரு வரலாற்றுச் சிறப்பைப் பெற்றிருந்தது. இருப்பினும், காலப்போக்கில் ஏற்பட்ட உலோக விலை உயர்வு மற்றும் பணவீக்கம் காரணமாக, ஒரு காசு நாணயத்தை அச்சடிப்பதற்கான செலவு அதன் உண்மையான மதிப்பை விட பல மடங்கு அதிகரித்தது. இதனால், 2008-ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் மலேசிய மத்திய வங்கியான பேங்க் நெகாரா, 1 சென் நாணயத்தை அச்சிடுவதையும் புழக்கத்தில் விடுவதையும் அதிகாரப்பூர்வமாக நிறுத்தியது.

ஒரு காசு நாணயம்




நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, சில்லறை வணிகத்தில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்க அரசாங்கம் 'விலை சுருட்டிவிடும் முறையை' (Rounding Mechanism) அறிமுகப்படுத்தியது. இதன்படி, மொத்தப் பில் தொகையின் இறுதி இலக்கம் 1, 2 காசுகளாக இருந்தால் அது '0' எனவும், 3, 4, 6, 7 காசுகளாக இருந்தால் '5' காசுகள் எனவும், 8, 9 காசுகளாக இருந்தால் '10' காசுகள் எனவும் மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

இங்குதான் பொதுமக்க மத்தியில் ஒரு நியாயமான கேள்வி எழுகிறது. ஒரு காசு நாணயமே புழக்கத்தில் இல்லாதபோது, சூப்பர் மார்க்கெட்டுகளிலும் கடைகளிலும் விற்கப்படும் பொருட்களின் விலையை ஏன் இன்னும் 99 காசு, 88 காசு, 27 காசு என ஒரு காசு வரிசையில் நிர்ணயிக்க வேண்டும்?

வியாபாரிகள் உளவியல் ரீதியாக வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காகவே இந்த முறையைப் பயன்படுத்துகின்றனர். உதாரணத்திற்கு, ஒரு பொருளின் விலை RM10 என்று இருப்பதை விட, RM9.99 என்று இருந்தால் அது மலிவாகத் தெரியும். ஆனால், நடைமுறையில் பயனீட்டாளர்கள் ரொக்கமாகப் பணம் செலுத்தும்போது, இந்த ஒரு காசு வித்தியாசம் விலை சுருட்டிவிடும் முறையால் மீண்டும் RM10.00 ஆக உயர்ந்து விடுகிறது.

கடன் அட்டை (ஊசநனவை ஊயசன) அல்லது மின்-பணப்பை (E-wallet) போன்ற டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் துல்லியமான தொகை கழிக்கப்பட்டாலும், ரொக்கப் பணத்தைப் பயன்படுத்தும் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் இதனால் குழப்பத்திற்கும் ஏமாற்றத்திற்கும் உள்ளாகிறார்கள். புழக்கத்தில் இல்லாத ஒரு நாணயத்தை அடிப்படையாகக் கொண்டு விலைப் பட்டியலைத் தயாரிப்பது தேவையற்றது மட்டுமல்லாமல், நுகர்வோரை ஏமாற்றும்

இல்லாத ஒரு நாணயத்தை விலைப் பட்டியலில் காட்டி பயனீட்டாளரின் உளவியலோடு விளையாடும் இந்த 99 காசு,

ஒரு தந்திரமாகவும் பார்க்கப்படுகிறது.

முடிவாக, மலேசியச் சந்தையில் இருந்து 1 சென் நாணயம் விடைபெற்றுப் பல ஆண்டுகள் ஆகி விட்டன.

88 காசு, 27 காசு போன்ற விலை நிர்ணய முறைகள் தற்போதைய சூழலுக்கு முற்றிலும் தேவையற்றவை. இந்தக் குழப்பமான விலை முறையை ஒழித்து,

நேரடியாக 5 காசு அல்லது 10 காசு என்ற கிட்டிய முழு எண்களில் மட்டுமே பொருட்களின் விலையை நிர்ணயிக்க வேண்டும் என்ற சட்டத்தை மலேசிய அரசாங்கம் உடனடியாகக் கொண்டு வர வேண்டும். இதன் மூலமே நுகர்வோர் உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு, சில்லறை வர்த்தகமும் வெளிப்படையானதாக மாறும்..












# புலிகளைக் காக்கக் களம் இறங்கிய ஓராங் அஸ்லி அதிரடிப் படை

மலாயாவின் கம்பீர அடையாளமான மலாயா புலிகள், இன்று காடுகள் அழிப்பு மற்றும் சர்வதேசச் சந்தையில் அவற்றின் உறுப்புகளுக்கு இருக்கும் மாறாத தேவை காரணமாக அழிவின் விளிம்பில் தள்ளப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி, மலேசியாவின் அடர்ந்த காடுகளில் வெறும் 150-க்கும் குறைவான புலிகளே எஞ்சியுள்ளன. இந்தத் தேசியப் பொக்கிஷத்தை மீட்பதற்கான போரில், காடுகளின் பூர்வகுடிகளான ஓராங் அஸ்லி சமூகத்தினர் முன்னெப்போதும் இல்லாத வகையில் முன்னணியில் நின்று செயல்படுகின்றனர்.

“மலாயா புலிகளைப் பாதுகாப்போம்" எனும் திட்டத்தின் கீழ், கெடா மாநிலத்தின் ராயல் பெலும் மற்றும் தெமெங்கோர் போன்ற மிக முக்கியமான வனப் பகுதிகளில் ஓராங் அஸ்லி இளைஞர்கள் 'ரேஞ்சர்களாக' நியமிக்கப்பட்டுள்ளனர். பல தலைமுறைகளாகக் காடுகளோடு பின்னிப் பிணைந்த வாழ்வைக் கொண்ட இவர்களுக்கு, காட்டின் ஒவ்வொரு பாதையும் விலங்குகளின் காலடித் தடங்களும் நுணுக்கமாகத் தெரியும்.

WWF-Malaysia மற்றும் Rimau போன்ற அமைப்புகள் இந்த பூர்வகுடி அறிவை நவீனத் தொழில்நுட்பத்துடன் இணைத்துள்ளன. சுமார் 100-க்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற ஓராங் அஸ்லி இளைஞர்கள், இப்போது தற்காலிக முகாம்களை அமைத்து, அடர்ந்த வனப் பகுதிகளில் வாரக் கணக்கில் தங்கி ரோந்துப் பணிகளை மேற்கொள்கின்றனர்.

புலிகளுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக விளங்குவது வேட்டைக்காரர்களால் மறைத்து வைக்கப்படும் இரும்புக் கம்பி கண்ணிகள். புலிகள் மட்டுமல்லாமல், அவற்றின் உணவான காட்டுப் பன்றிகளும் மான்களும் இதில் சிக்கி உயிரிழக்கின்றன. ஓராங் அஸ்லி ரேஞ்சர்கள் காடு முழுவதையும் சல்லடை போட்டுத் தேடி, இத்தகைய ஆயிரக்கணக்கான

கண்ணிகளை அகற்றியுள்ளனர். 2019-ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீவிர நடவடிக்கையின் விளைவாக, ராயல் பெலும் காடுகளில் வேட்டையாடுதல் நடவடிக்கைகள் 90% வரை குறைந்துள்ளதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

வெறும் ரோந்துப் பணியோடு நின்றுவிடாமல், ஓராங் அஸ்லி மக்கள் இப்போது நவீனக் கருவிகளைக் கையாள்வதிலும் வல்லுநர்களாக மாறியுள்ளனர். காடுகளில் 'கேமரா பொறிகளை' சரியான இடங்களில் பொருத்துவது, ஜிபிஎஸ் கருவிகள் மூலம் தரவுகளைச் சேகரிப்பது போன்ற பணிகளை அவர்கள் மேற்கொள்கின்றனர். இதன் மூலம் ஒவ்வொரு புலியின் நடமாட்டத்தையும் தனித்தனியாக அடையாளம் காண முடிகிறது. குறிப்பாக, புலிக் குட்டிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதைக் கண்காணிப்பது இவர்களின் பணியில் மிக முக்கியமான அம்சமாகும்.

இந்தத் திட்டம் புலிகளைப் பாதுகாப்பதுடன், ஓராங் அஸ்லி சமூகத்தின் வாழ்வாதாரத்திலும் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

வேட்டையாடுதலில் ஈடுபடுபவர்களுக்கு மாற்றாக, ஒரு கௌரவமான வேலையையும் நிலையான வருமானத்தையும் இது வழங்குகிறது. மேலும், வாசிப்பு இல்லங்கள் போன்ற கல்வி மையங்கள் மூலம் அவர்களின் குழந்தைகளுக்கு வனப் பாதுகாப்பு குறித்த பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இதன் மூலம், அடுத்த தலைமுறை ஓராங் அஸ்லி சமூகத்தினர் காடுகளின் வெறும் குடியிருப்பாளர்களாக மட்டுமன்றி, அதன் அதிகாரப்பூர்வ பாதுகாவலர்களாகவும் வளர்ந்து வருகின்றனர்.

மலேசியாவின் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பதில் ஓராங் அஸ்லி சமூகத்தினர் ஒரு 'மனிதச் சுவர்' போலச் செயல்படுகின்றனர். அவர்களின் பாரம்பரிய அறிவையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரிப்பதன் மூலமே மலாயா புலிகள் மீண்டும் கர்ஜிக்க முடியும். அரசாங்கம், தனியார் நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் இணைந்து செயல்படும் இந்த 'அதிகாரப்படுத்துதல்' முயற்சி, உலகளாவிய வனப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறது.





கிளாடியா தியோபிலஸ், உண்மைக்காகவும் துணிச்சலான ஊடகப் பணிக்காகவும் அறியப்பட்ட ஒரு சிறந்த மலேசியப் பெண் பத்திரிகையாளர் ஆவார். 2013 பிப்ரவரி 2 அன்று லெபனானில் நிகழ்ந்த ஓர் எதிர்பாராத துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், தனது 42வது வயதில் அவர் உயிரிழந்தார். அவரின் பிறப்பு, கல்வி, ஊடகச் சாதனை மற்றும் சோகமான மறைவு குறித்து இக்கட்டுரை விவரிக்கிறது. கிளாடியா தியோபிலஸ் நெகிரி செம்பிலான், சிரம்பான் நகரில் பிறந்து வளர்ந்தார். இவர் ஒரு நடுத்தரக் கத்தோலிக்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது குடும்பத்தினர் சிரம்பானில் உள்ள தாமான் புக்கிட் கெப்பாயாங் பகுதியில் வசித்து வந்தனர்.





# பேனா முனையால் உலகை வென்றவள்: லெபனானில் சாய்ந்த மலேசிய ஊடகப் புலி

கிளாடியா தியோபிலஸ் தனது ஆரம்பக் கல்வியை லாபு ஹிலிர் தேசியப் பள்ளியில் பயின்றார். பின்னர், கோலா பிலாவில் உள்ள துவாங்கு ஜாபர் இடைநிலைப்பள்ளி மற்றும் சிரம்பானில் உள்ள புகழ்பெற்ற கிங் ஜார்ஜ் ஏ ஆகிய பள்ளிகளில் உயர்நிலைக் கல்வியைத் தொடர்ந்தார். அதன் பிறகு, சட்டத் துறையில் ஆர்வம் கொண்டு ஏடிசி சட்டக் கல்லூரியில் தனது உயர்கல்வியைப் பெற்றார்.

சட்டம் பயின்ற போதிலும், சமூகத்தின் மீதான அக்கறையும் உண்மையை வெளிக்கொண்டுவரும் ஆர்வமும் கிளாடியாவை ஊடகத்துறையை நோக்கி ஈர்த்தது. கிளாடியா தனது உலகில் பெரிய அளவில் சாதித்துக் காட்டினார்.

மலேசியாவில் கிளாடியாவின் சிறந்த பணியைக் கண்டு, அனைத்துலக ஊடக நிறுவனமான அல் ஜஸீரா ஆங்கில ஊடகம் அவரைத் தேர்ந்தெடுத்தது. முதலில் கோலாலம்பூர் கிளையிலும், பின்னர் கத்தாரின் டோஹா தலைமையகத்திலும் வலைத்தளத் தயாரிப்பாளராக உயர்ந்து அனைத்துலக அளவில் முத்திரை பதித்தார்.





பத்திரிகையாளர் பயணத்தை சுமார் 1995ஆம் ஆண்டு தி சன் ஆங்கில நாளிதழில் ஓர் இளம் நிருபராகத் தொடங்கினார். அங்கு புலனாய்வுச் செய்திகள் மற்றும் உள்ளூர் அரசியல் சார்ந்த கட்டுரைகளை எழுதத் துவங்கினார்.

பின்னர் மலேசியாவின் முன்னணி மாற்று ஊடகமான மலேசியாகினியில் மூத்த பத்திரிகையாளராக இணைந்தார். இங்குதான் அவரது திறமை முழுமையாக வெளிப்பட்டது. சுற்றுச்சூழல் பாதிப்புகள், மனித உரிமை மீறல்கள் மற்றும் நீதிமன்றச் செய்திகளைத் துணிச்சலுடன் எழுதினார். ஒரு சிறந்த புலனாய்வுப் பத்திரிகையாளராக மலேசிய ஊடக

கடந்த 2013 பிப்ரவரி மாதத் தொடக்கத்தில், கிளாடியா தனது இரண்டு நண்பர்களுடன் லெபனான் நாட்டிற்கு ஒரு சுற்றுலாப் பயணமாகச் சென்றிருந்தார். பிப்ரவரி 2 ஆம் தேதி அதிகாலை சுமார் 2.30 மணியளவில், லெபனானின் மலைப் பகுதியான பாக்லீன் என்ற இடத்தில் அவர் தங்கியிருந்த வீட்டில் ஒரு விபத்து நிகழ்ந்தது.

அங்குள்ள துப்பாக்கிகளைக் கையாண்ட போது நிகழ்ந்த எதிர்பாராத விபத்தில் பாய்ந்த ஒரு தோட்டா கிளாடியாவின் மேல் பட்டு சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார். லெபனான் நாட்டுப் போலீசாரும் பெய்ரூட்டில் உள்ள மலேசியத் தூதரகமும் இது ஒரு துரதிர்ஷ்டவசமான விபத்து என்பதை உறுதிப்படுத்தின. அவரது உடல் மலேசியாவுக்குக் கொண்டு வரப்பட்டு, சிரம்பானில் உள்ள தேவாலயத்தில் இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன.



கிளாடியாவின் மரணம் மலேசிய மற்றும் அனைத்துலக ஊடகத்துறையினரை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. மலேசியாகினியின் முன்னாள் முதன்மைச் செயல்முறை அதிகாரி பிரேமோஷ் சந்திரன் கூறுகையில், "கிளாடியா உண்மையை அப்படியே எழுதுவதில் இருந்து ஒருபோதும் பின்வாங்கியதில்லை. கதையின் ஆழம் வரை சென்று உண்மையை வெளிக்கொண்டுவரும் அசாத்தியத் துணிச்சல் கொண்ட ஒரு சிறந்த பத்திரிகையாளர் அவர்" என்று வர்ணித்தார்.

"கிளாடியா, ஒரு துடிப்பான, எப்போதும் சுறுசுறுப்பான மற்றும் மிகச் சிறந்த திறமைசாலி. அவரது மறைவு அனைத்துலக ஊடக உலகிற்கு ஒரு பேரிழப்பு" என்று அல்-ஜஸீரா சகப் பணியாளர்கள் கண்ணீர் மல்கக் கூறினர்.

"உண்மையைக் கண்டறியும் ஆபத்துகளைத் துணிவுடன் எதிர்கொள்ளும் பத்திரிகையாளர்களில், கிளாடியா மிகச் சிறந்த தகுதி படைத்தவர். அவர் அமைதியான, அதே சமயம் மிகுந்த தன்னம்பிக்கை கொண்ட ஆளுமை" என்று அவரை வர்ணித்தனர்.

மலேசியாவின் ஒரு சிறிய ஊரில் பிறந்து, தனது அசாத்தியத் திறமையால் அனைத்துலக ஊடகமான அல் ஜஸீரா வரை உயர்ந்த கிளாடியா தியோபிலஸின் வாழ்க்கை, இன்றைய இளம் பத்திரிகையாளர்களுக்கு ஒரு சிறந்த உத்வேகம் ஆகும்.

**நகப் பூச்சு என்பது வெறும் அழகுச் சாதனம் மட்டுமல்ல; அது ஒருவரின் மனநிலை, பாணி மற்றும் சுய வெளிப்பாட்டின் அடையாளமாக விளங்குகிறது என்று வண்ண உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். நகங்களின் நிறம் ஒருவரின் குணாதிசயத்தைத் துல்லியமாக வரையறுக்கும் என்பதற்கு அறிவியல் பூர்வமான சான்றுகள் இல்லை என்றாலும், சில குறிப்பிட்ட நிறங்கள் மனிதர்களின் தனித்துவமான பண்புகளோடு நீண்ட காலமாகத் தொடர்புபடுத்தப்பட்டு வருகின்றன.**





# நகப் பூச்சு நிறங்கள் உங்கள் ஆளுமையை வெளிப்படுத்துமா?

## நேர்மறை எண்ணமும் மென்மையும்: இளஞ்சிவப்பு (Pink)

இளஞ்சிவப்பு நிறம் கனிவு, நட்பு மற்றும் பழகும் தன்மையைக் குறிக்கிறது. இதன் மென்மையான நிழல்கள் மெருகேறிய நளினத்தையும், பிரகாசமான நிழல்கள் ஆற்றல், சுறுசுறுப்பு மற்றும் துடிப்பான ஆளுமையையும் வெளிப்படுத்துகின்றன.



## தன்னம்பிக்கையின் அடையாளம்: சிகப்பு RED



உலகளவில் மிகவும் பிரபலமான நகப் பூச்சு நிறங்களில் சிகப்பும் ஒன்று. இது ஓர் "ஆற்றல்மிக்க நிறமாக" கருதப்படுகிறது. சிகப்பு நிறத்தை விரும்புபவர்கள் அதிக தன்னம்பிக்கை, லட்சியம் மற்றும் தலைமைப் பண்பு கொண்டவர்களாக இருப்பார்கள். இவர்கள் துணிச்சலானவர்களாகவும், பிறரின் கவனத்தை ஈர்ப்பதில் தயக்கம் இல்லாதவர்களாகவும் காணப்படுகிறார்கள்.



## தனித்துவத்தின் பிரதிபலிப்பு: கருப்பு (Black)

மாற்று நாகரீகமாக இருந்த கருப்பு நிற நகப் பூச்சு, இன்று முதன்மையான பாணியாக மாறியுள்ளது. இது சுதந்திரம், படைப்பாற்றல் மற்றும் வழக்கமான விதிகளுக்கு சவால் விடும் மனப்பான்மையைக் குறிக்கிறது. கருப்பு நிறத்தைத் தேர்ந்தெடுப்பவர்கள் தனித்துவமான மற்றும் வெளிப்பாட்டுத் தன்மை கொண்ட ஆடை வடிவமைப்புகளை விரும்புபவர்களாக இருக்கிறார்கள்.

## எளிமையின் நேர்த்தி: நியூட் மற்றும் பீஜ் (Nude and Beige)

இயற்கையான மற்றும் நடுநிலையான நிறங்களை விரும்புபவர்கள் அமைதி, நேர்த்தி மற்றும் நடைமுறைத்தன்மைக்கு முன்னுரிமை



அளிக்கிறார்கள். இந்த நிழல்கள் தொழில்முறைத் தோற்றத்தையும், ஆரவாரமற்ற உன்னதமான பாணியையும் வெளிப்படுத்துகின்றன.

## ஸ்திரத்தன்மை மற்றும் அமைதி: நீலம் (Blue)

வாழ்க்கையில் சமநிலையையும் அமைதியையும் விரும்புபவர்கள் நீல நிறத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள். வெளிர் நீலம் படைப்பாற்றலையும் அமைதியையும் குறிக்கும் வேளையில், அடர் நீல நிறம் நம்பகத்தன்மை, தன்னம்பிக்கை மற்றும் உணர்ச்சிக் கட்டுப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.

## படைப்பாற்றலின் உச்சம்: ஊதா (Purple)

ஊதா நிறம் கற்பனைத் திறன், கலை வெளிப்பாடு மற்றும் அசல் தன்மை ஆகியவற்றோடு தொடர்புடையது. இந்த நிற நகப் பூச்சைத் தேர்ந்தெடுப்பவர்கள் புதுமையான சிந்தனையாளர்களாகவும், கூட்டத்தில் தனித்து நிற்க விரும்புபவர்களாகவும் கருதப்படுகிறார்கள்.

## வளர்ச்சி மற்றும் புதுப்பித்தல்: பச்சை (Green)

பச்சை நிறம் இயற்கை, புதுப்பித்தல் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியைக் குறிக்கிறது. சுய முன்னேற்றம், முன்னேற்றப் பாதை மற்றும் சமநிலையான வாழ்க்கை முறையை மதிப்பவர்கள் இந்த நிறத்தை அதிகம் தேர்வு செய்கிறார்கள்.

## கொண்டாட்டத்தின் குறியீடு: கிளிட்டர் மற்றும் மெட்டாலிக் (Glitter & Metallics)

மின்னும் கிளிட்டர் மற்றும் மெட்டாலிக் நகப் பூச்சுகள் கொண்டாட்டம் மற்றும் துடிப்பான சுய வெளிப்பாட்டைக் குறிக்கின்றன. உற்சாகமான மற்றும் ஆற்றல் நிறைந்த பாணியை விரும்புபவர்களே இத்தகைய கவர்ச்சிகரமான நிறங்களைத் தேர்வு செய்கிறார்கள்.

நகப் பூச்சு நிறங்கள் ஒருவரின் ஆளுமையை முழுமையாகத் தீர்மானிக்கும் இறுதித் தேர்வு அல்ல என்று ஃபேஷன் வல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள். மனிதர்களின் நிறத் தேர்வுகள் அவர்களின் அன்றாட மனநிலை, சூழ்நிலை மற்றும் தற்போதைய ஃபேஷன் ட்ரெண்டுகளுக்கு ஏற்ப மாறக்கூடும். இருப்பினும், நகப் பூச்சு என்பது மக்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளவும், தங்களின் தனிப்பட்ட பாணியைக் காட்டவும் உதவும் எளிய, ஆனால் ஆழமான ஒரு வழியாகவே இன்றும் பார்க்கப்படுகிறது.






Published by: Eye Mag Publication Sdn Bhd (1397097-V) No 73-2, Jalan Prima SG 3, Prima Sri Gombak, 68100 Batu Caves, Selangor, H/P: 03-61811414
Email: Admin@thisaigalnews.com Printed by Twinstar Synergy Sdn Bhd (987235X) Lot 2A, Jalan 13/2A, 46200 Petaling Jaya, Selangor.